CESL

# சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்



# வருடாந்த அறிக்கை

# 2021

மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்திற்கு (ம.பொ.உ.ப.)
முற்றிலும் சொந்தமான ஒரு துணை நிறுவனம்
நீர்ப்பாசன அமைச்சகம்
(எமது கம்பனி *ISO 9001, ISO 14001* மற்றும் *ISO 45001* சான்று பெற்ற கம்பனியாகும்)

# உள்ளடக்கம்

*பக்கம்*


01. எம்மை பற்றி

*நாம் யார்*......................................................................................1

*தூரநோக்கு, செயற்பணி, கூட்டிணைந்த குறிக்கோள்கள்*..........................................................................2

*நிறுவன கட்டமைப்பு*..............................................................3

02. நிதி குறிப்புகள் ............................................................4

03. பணிப்பாளர்கள் சபை..................................5-9

04. பணிப்பாளர்களின் அறிக்கை ............................ 10-11

05. கணக்காய்வு குழு அறிக்கை................................ 12

06. சேவைகள் துறைகள்.................................................. 13-15

07. வணிக செயற்பாடுகள் மீளாய்வு ......................16-20

08. நிதி கூற்றுக்கள்

*சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை*........22-36

*முழுமையான வருமான கூற்று* .............................37

*நிதி நிலை கூற்று* ..................................................38-39

*ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று* .....................40

*காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று* .............................41-42

*நிதி கூற்றுக்களுக்கான குறிப்புகள்* ......................43-74

09. ஆறு ஆண்டு சுருக்கம்.......................................75

உள்ளக பிற்புற அட்டை - *கூட்டிணைந்த தகவல்கள்*...............................................................76

# 01. எம்மை பற்றி



## நாம் யார்...?

**சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் (CESL) என்பது மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்திற்கு (ம.பொ.உ.ப.) முற்றிலும் சொந்தமான துணை நிறுவனமாகும். இது 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2003 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் வரையறுக்கப்பட்ட ஒரு பொறுப்பு கம்பனியாக கூட்டிணைக்கப் பட்டது. அதன் பின்னர் இது 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீண்டும் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மீளப் பதிவு செய்யப்பட்டது.**

இந்த CESL நிறுவனம் இந்த காலப் பகுதியில் நிர்மாண செயற்பாடுகள் அதிகளவில் அதிகரித்ததன் காரணமாக நிர்மாண சேவைகளுக்கு அதிக கேள்வி உருவாகியது. இந்த வாய்ப்பை பயன்படுத்தும் முகமாக இந்த நிறுவனம் 2011 ஆம் ஆண்டு முதல் பகுதியில் துல்லியமாக தனது செயற்பாடுகளை ஆரம்பிக்க தொடங்கியது. CESL, கைத்தொழிலினால் உருவான சவால்களுக்கு முகம்கொடுத்து, நிர்மாண முகாமையையும், தொழில் நுட்ப தொடர்பையும் சம்பாதித்த அதே வேளை ம.பொ.உ.ப. உடன் இணைந்து பணியாற்றியன் மூலமாக கருத் திட்டம் பற்றிய தனது அறிவையும் வளர்த்துள்ளது. CESL நிறுவனத்தின் முக்கிய வணிக பணி கட்டிடங்கள், வீதிகள், நீர்ப்பாசன நிர்மாணங்கள் என்பவற்றிலும் மற்றும் ஏனைய விடேஷ கருத் திட்டங்களிலும் ஒருமுகப்பட்டுள்ளது. எமது இந்த நிறுவனமானது தனது கருத் திட்டங்களுக்கு தேவையான கொங்கிறீட்டு மற்றும் அஸ்பால்ட்டு தகடுகள் என்பவற்றை உற்பத்தி செய்வதிலும் ஈடுபடுகின்றது.

இந்த எமது CESL நிறுவனம் அரச துறை மற்றும் தனியார் துறை ஆகிய துறைகளின் வாடிக்கையாளர்களுக்கு நிர்மாண சேவைகளை பெற்று கொடுக்கின்றது. இந்த CESL நிறுவனம் கால நேரத்திற்கு இதன் குறித்த இலக்குகளையும் மற்றும் சகல வகையான நிறுவன சார் நிர்மாண கருத் திட்டங்களில் அத்தகைய இலக்குகளையும் அடைந்ததன் மூலம் அரச அதிகாரிகள், வணிக தலைவர்கள் மற்றும் நிருவாகிகள் ஆகிய தரப்புகளின் நம்பிக்கையை சம்பாதித்துள்ளது. எமது இந்த நிறுவனம் ம.பொ.உ.ப. இன் கீழ், கைத்தொழிலினுள் உசாதுணை நிறுவனமாக ஆரம்பத்தில் 1973 ஆம் ஆண்டு பிரவேசித்ததை பின்னோக்கி பார்க்கும் போது, அத்தகைய பிரவேசமானது தற்பொழுது நாம் ஒரு உந்துதலாக தொழிற்படும் அளவுக்கு எமக்கு பல பாடங்களை கற்றுத் தந்துள்ளது. ம.பொ.உ.ப. இன் EPC பிரிவின் கீழ் இதற்கு கிடைத்த நிர்மாணம் சார்ந்த அனுபவமும் ஒரு நிலைபெறுதகு வணிக சூழலை தோற்றுவித்துள்ளது.




"இலங்கையின் நிர்மாண
கைத்தொழிலுக்கு
தனித்துவமான
முன்மாதிரி நிறுவனமாக
விளங்குதல்."

"போதியளவில் பங்களிப்பு
மதிக்கப்பட்டுள்ள அதிக
ஊக்கம் வாய்ந்த, பயிற்சி
பெற்ற ஊழியர்களை
கொண்டு நிர்மாண தொழில்
நுட்பத்திலும் மற்றும்
புத்தாக்க நடவடிக்கையிலும்
சிறப்பு பெறல்."




# கூட்டிணைந்த குறிக்கோள்கள்



1. தொழிற்படும் சகல பிரிவுகளுக்குமான ஒன்றிணைந்த வெளிப்படைத்தன்மை வாய்ந்த முகாமைத்துவ முறைமையை தாபித்தல்.
2. தனித்துவமான தரமான ஒரு, சுற்றாடல், சுகாதார மற்றும் பாதுகாப்பு முறைமையை தாபித்தல்.
3. முதலீட்டு வாய்ப்புகளை பல்லினப்படுத்துவதன் மூலம் போதியளவான தொழிற்படு மூலதனத்தை
4. நிர்மாண கைத்தொழிலில் சிறந்த மனித வள தளத்தை கொண்டிருத்தல்.
5. சுயாதீனமாக இலாம் ஈட்டும் ஒரு நிறுவனம் என்ற வகையில் CESL இன் சொத்துக்களை பயனுள்ள விதத்தில் முகாமை செய்தல்.
6. நிர்மாண ஆகுசெலவுகளை அனுகூலப்படுத்தும் பொருட்டு நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி முறைமை மேம்பாட்டு முறையியலை அறிமுகப்படுத்துதல்.
7. கையிலிருக்கும் போதிய வேலைகளை பேணி நிறுவன நிலைபெறுதகு தன்மையை மேலும் வளர்த்தல்.

# நிறுவன கட்டமைப்பு




**Legend**

CSD - Contract and System Development

HSE - Health, Safety and Environment

HR - Human Resources

TRD - Training, Research and Development

ERP - Enterprise Resource Planning

IT - Information Technology

Tech - Technical

CTend - Central Tendering

* Chief Operation Engineer Sections in CESL : Western Province - 1, Western Province - 2, Central Province, Southern Province, Eastern & Uva Province, North Central Province, Northern Province

# 02. நிதிக் குறிப்புகள்

| | 2021 மில்.ரூ. | 2020 மில்.ரூ. | 2019 மில்.ரூ. | 2018 மில்.ரூ. | 2017 மில்.ரூ. |
|---|---|---|---|---|---|
| நிர்மாண வருமானம் | 8,298 | 6,694 | 10,474 | 11,189 | 12,294 |
| முழு மொத்த இலாபம் | 840 | 622 | 781 | 786 | 682 |
| வரிக்கு முன்னருள்ள தேறிய இலாபம் | 254 | 70 | 206 | 173 | 158 |
| வரிக்கு பின்னருள்ள தேறிய இலாபம் | 210 | 59 | 141 | 121 | 120 |
| மொத்த சொத்துக்கள் | 13,033 | 12,558 | 12,681 | 12,616 | 12,345 |
| பங்களித்த மூலதனம் | 10 | 10 | 10 | 10 | 10 |
| மொத்த ஒப்புரவு | 1,063 | 856 | 604 | 421 | 422 |
| மொத்த ஒப்புரவும் அதற்கு சமனானவையும் | 13,033 | 12,558 | 12,681 | 12,616 | 12,345 |
| நடைமுறை சொத்துக்கள் | 12,442 | 11,947 | 12,207 | 12,181 | 11,865 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 10,493 | 10,011 | 10,421 | 10,565 | 10,329 |







| நிர்மாண வருமானம் (மில்.ரூ.) | | | | |
|---|---|---|---|---|
| ***2017*** | ***2018*** | ***2019*** | ***2020*** | ***2021*** |
| 12,294 | 11,189 | 10,474 | 6,694 | 8,298 |

| மொத்த சொத்துக்கள் (மில்.ரூ.) | | | | |
|---|---|---|---|---|
| ***2017*** | ***2018*** | ***2019*** | ***2020*** | ***2021*** |
| 12,345 | 12,616 | 12,681 | 12,558 | 13,033 |

# 03. பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம்



**பொறியியலாளர் கே.டபிள்யூ. ஐவன் டி சில்வா - தலைவர்**

*B. Sc. (Eng.), M. Eng. Sc. (Const. Mgt), C. Eng.*



**திரு அனுர திஸாநாயக்க - பணிப்பாளர்**

*B. Sc. (Business Administration), MPA (Public Policy)*



**பொறியியலாளர் ஜி. ஆர். ஏ. எஸ். குணதிலக்க - பணிப்பாளர்**

B. Sc. Eng. (Hons) Sri Lanka, M. Sc. (Hydropower) Norway,
M. Sc. (Struct.) Sri Lanka, MIE (SL), C. Eng., MSSE (SL)



**திரு. பி.கே.ஆர்.பாலசூரியா - பணிப்பாளர்**

*B. Com (Special) (Hons) University of Sri Jayawardenepura, MA (Economics) University of Kelaniya, Member of CIPFA Sri Lanka*



**பொறியியலாளர் கே.எச். நலின் சன்ஜய த சில்வா - பணிப்பாளர்**

*B. Sc. Eng. (Hons) Sri Lanka, C. Eng., MIE (SL), PMP, MIEEE (PES), MLABSE*



**பொறியிலாளர் எஸ்.ஏ.யூ.டீ.சி. சிறிவர்த்தன - பணிப்பாளர்**

*B. Sc. Eng. (Hons) Sri Lanka, M. Sc. (Hydraulic Eng.) Netherlands, C. Eng., MIE (SL), M Cons. E (SL), M SLNCOLD (SL), Registered Structural Engineer (SL)*



**திரு டீ. மாபோபிட்டிய - பணிப்பாளர்**

*ACA (SL) Chartered Accountant*

## பொறியியலாளர் கே.டபிள்யூ. ஐவன் டி சில்வா - தலைவர்

*B. Sc. (Eng.), M. Eng. Sc. (Const. Mgt), C. Eng.*

2021 ஆம் ஆண்டு முதல் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார். CESL இன் தாய் நிறுவனமான மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தின் தலைவராகவும் செயல்படுகின்றார்.

பொறியியலாளர் ஐவான் டி சில்வா 1979 ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் BSc பட்டத்தை பெற்றுள்ளார். மேலும் 1993 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் M. Eng. Sc பட்டத்தையும் பெற்றுள்ளார். 1976 ஆம் ஆண்டு நீர்ப்பாசனப் பொறியாளராக நீர்ப்பாசனத் துறையில் தனது தொழில் வாழ்க்கையைத் தொடங்கிய அவர், இலங்கையை விட்டு வெளியேறும் வரை நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு பதவிகளில் பணியாற்றியுள்ளார். 1993-1997 ஆம் ஆண்டு வரை பொலன்னறுவை பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராகப் பணியாற்றிய பின்னர் 1997 ஆம் ஆண்டு இறுதியில் இலங்கை விட்டுச்சென்றார்.

இவர் 1998 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை நியூசிலாந்தில் பணியாற்றியுள்ளார். 2006 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டு, நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்படும் வரை இந்தப் பதவியில் பணியாற்றினார். இவர் 2014 ஆம் ஆண்டு இறுதி வரை செயலாளர் பதவியில் பணியாற்றினார். பொறியியலாளர் ஐவான் டி சில்வா மீண்டும் 2016 ஆம் ஆண்டில் நியூசிலாந்தில் உள்ள ஒக்லாண்ட் போக்குவரத்து நிறுவனத்தில் புலனாய்வு மற்றும் வடிவமைப்பு பொறியாளராக இணைந்து 2019 ஆம் ஆண்டு இறுதி வரை இந்த நிறுவனத்தில் பணியாற்றினார். தற்போது இவர் கிராமப்புற நெல் தொடர்பான நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சின் செயலாளராக பணியாற்றி வருகின்றார்.

## திரு அனுர திஸாநாயக்க – பணிப்பாளர்

*B. Sc. (Business Administration), MPA (Public Policy)*

2021 ஆம் ஆண்டு முதல் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார். இதே நேரம் இவர் CESL இன் தாய் நிறுவனமான மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார்.

இலங்கை நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் திரு. அனுர திஸாநாயக்க 1990 ஆம் ஆண்டு தனது இலங்கை நிர்வாக சேவை வாழ்க்கையை ஆரம்பித்தார். 30 வருடங்களுக்கும் மேலாக தனது புகழ்பெற்ற நிர்வாக சேவை வாழ்க்கையில், கல்வி உயர் கல்வி தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சின் செயலாளர் உட்பட பல பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்துள்ளார்.

நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் என்ற வகையில், திரு. திஸாநாயக்க நாட்டின் நீர் வளங்களை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்யும் பொறுப்பை வகிக்கிறார். இந்த முயற்சியில், அனைத்து மட்டங்களிலும் ஒருங்கிணைந்த நீர்வள முகாமைத்துவ நடைமுறைகள் செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்காக அவர் சம்பந்தப்பட்ட அனைத்து பொது நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகள் என்பவற்றுடன் ஒருங்கிணைந்து தொழிற்படுகின்றார்.

திரு. அனுர திஸாநாயக்க, ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் புகழ்பெற்ற பழைய மாணவர் ஆவார். மேலும் இவர் அமெரிக்காவின் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டப்படிப்புத் தகுதிகளையும் பெற்றுள்ளார். இவர் 2001/2001 ஃபுல்பிரைட்/ஹூபர்ட் எச். ஹம்ப்ரி பெல்லோஷிப் விருது உட்பட பல மதிப்புமிக்க விருதுகளைப் பெற்றுள்ளார். 2000 இல் இலங்கையின் மிகச் சிறந்த இளைஞர்களுக்கான விருது, 1999 இல் E cient அர்ப்பணிப்புக்கான ஜனாதிபதி மேற்கோள், 1995 இல் சிறந்த பொதுத் துறை செயல்திறன் மேம்பாட்டுத் திட்டத்திற்கான தேசிய விருது, 1985 இல் ஆசிய இளைஞர் சம்மேளனத்தின் வருடாந்த பயண விருது மற்றும் 1985 இல் அமெரிக்க கள சேவை யூத் எக்ஸ்சேஞ்ச் பெல்லோஷிப் 1981/82 முதலிய விருதுகள் இவற்றில் அடங்குகின்றன.

## பொறியியலாளர் ஜி. ஆர். ஏ. எஸ். குணதிலக்க - பணிப்பாளர்

*B. Sc. Eng. (Hons) Sri Lanka, M. Sc. (Hydropower) Norway, M. Sc. (Struct.) Sri Lanka, MIE (SL), C. Eng., MSSE (SL)*

இவர் 2019 ஆம் ஆண்டிலிருந்து சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் தற்பொழுது CESL இன் தாய் நிறுவனமான மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்தின் பொது முகாமையாளர் பதவியை வகிக்கின்றார்.

சென்ட்ரெல் இன்ஜினியர்ஸ் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தின் பணிப்பாளரான பொறியியலாளர் ஜி.ஆர்.ஏ.எஸ். குணதிலக்க அவர்கள் சிவில் பொறியியல் பிரிவில் சிறப்புப்பட்டம் பெற்ற ஒருவராவார். இவர் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் வருகைதரும் ஒரு கல்வி விரிவுரையாளராவார். இவர் தற்பொழுது ஒரு பொது முகாமையாளராக இருந்து, மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்திற்கு (மபொஉப) வழிகாட்டி வருகின்றார்.

பொறியியலாளர் குணதிலக்க 1986 ஆம் ஆண்டில் மபொஉப இல் ஒரு சிவில் பொறியியலாளராக தனது தொழிலை ஆரம்பித்தார். தற்பொழுது இவர் பரந்தளவு அனுபவத்தை பெற்று பல ஆற்றல்களிலும் பணியகத்திற்கு பணியாற்றி வருகின்றார். இவர் பதவியுயர்வின் ஊடாக மபொஉப பதவியுயர்வு பெற்ற ஒரு அதிகாரியாவார். இஅ பொறுப்பேற்ற வட கிழக்கு மாகாணங்களின் யுத்தத்திற்கு பிந்தியகால மீள்நிர்மாண பணிகளுக்கும் மற்றும் சவால்கள் நிறைந்த சுனாமிக்கு பிந்தியகால மீள்நிர்மாண பணிகளுக்கும் குறிப்பாக முன்னின்று பங்களிப்பை நல்கி நாட்டில் தேசிய ரீதியாக பல முக்கிய சமூக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திற்கான பொறியியல் சேவையில் கடந்த 35 ஆண்டு காலமாக தனது தனித்துவமான தலைமைத்துவத்தை பிரதிபலித்துக்காட்டியதால் நன்கு மதிக்கப்பட்ட ஒரு அதிகாரியாவார்.

பொறியியலாளர் குணதிலக்க இலங்கைக்கு பொருத்தமான உகந்த பொறியியல் கைத்தொழில் நியமங்களின் அபிவிருத்திற்கு பங்களிக்கின்ற பல அரச துறை ஒழுங்குறுத்துகை நிறுவனங்களும் மற்றும் ஏனைய நிறுவனங்களும் நியமித்திருக்கின்ற பல குழுக்களிலும் பணியாற்றி வருகின்றார்கள். குணதிலக்க பல ஆண்டு காலமாக தான் பெற்ற விலைமதிக்கவியலாத அறிவின் ஊடாக பல கனிஷ்ட பொறியியலாளர்களுக்கு அவர்களின் பட்டயப் பொறியியல் மற்றும் தொழில் அபிவிருத்தி ஆகிய விடயங்களில் பயிற்சியையும் மற்றும் ஆலோசனையையும் வழங்கி இவர் தொடர்ந்து அவர்களுக்கு கற்பித்து வருகின்றார். பொறியியலாளர் குணதிலக்க முக்கியமான பல தொழில் நிறுவனங்களில் காத்திரமான உறுப்புரிமையை வகிக்கின்றார்கள். இவர் தனது பட்டயப் பொறியியல் பட்டத்தை பெற்ற பின்னர் 1991 ஆம் ஆண்டில் MIE இல் ஒரு கூட்டுத்தாபன அங்கத்தவராக இணைந்தார். இவர் இலங்கை நிர்மாணப் பொறியியலாளர்கள் சங்கத்தின் ஒரு அங்கத்தவராகவும் மற்றும் இலங்கை புவித்தொழில் நுட்பவியல் சங்கத்தின் ஒரு அங்கத்தவராகவும் உள்ளார். இவரின் கடுமையான வேலைப்பளுக்கு மத்தியிலும் இவர் பல சமூக மற்றும் சமய செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றார்.

## திரு. பி.கே.ஆர்.பாலசூரியா - பணிப்பாளர்

*B. Com (Special) (Hons) University of Sri Jayawardenepura, MA (Economics) University of Kelaniya, Member of CIPFA Sri Lanka*

2021 ஆம் ஆண்டு முதல் பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இதே நேரம் இவர் CESL இன் தாய் நிறுவனமான மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார்.

திரு. பீ.கே.ஆர். பாலசூரிய இலங்கை கணக்காளர் சேவையின் (SLAcS) I வகுப்புப் பணியாளர் ஆவார். 1992 ஆம் ஆண்டு இலங்கை கணக்காளர் சேவையில் இணைந்து கொண்டு அரச துறையில் 30 வருடங்களுக்கும் மேலான பணி அனுபவம் கொண்டவர். தனது பதவிக்காலத்தில் பிரதேச செயலகங்களில் பல்வேறு பதவிகளிலும் தபால் திணைக்களத்தின் பிரதம கணக்காளராகவும் சேவையாற்றியுள்ளார். நிதி அமைச்சின் தலைமை நிதி அதிகாரியாக தனது தற்போதைய பதவியின் கடமைகளை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர், இவர் பொதுத் திறைசேரியின் திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளராகப் பொறுப்புகளை வகித்துள்ளார்.

இவர் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் (SEC), இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (SLBC), இலங்கை தர நிர்ணய நிறுவனம் (SLSI) மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை ஆகியவற்றின் பணிப்பாளர் சபையின் உறுப்பினராகவும் பணியாற்றுகின்றார்.

---

## பொறியியலாளர் கே.எச். நலின் சன்ஜய த சில்வா - பணிப்பாளர்

*B. Sc. Eng. (Hons) Sri Lanka, C. Eng., MIESL, PMP, MIEEE (PES), MLABSE*

இவர் 2020 ஆம் ஆண்டிலிருந்து சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் தற்பொழுது CESL இன் தாய் நிறுவனமான மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்தின் பணிப்பாளர் ஒருவராக பணியாற்றி வருகின்றார்.

பொறியியலாளர் நலின் எஸ். த சில்வா 2005 ஆம் ஆண்டு மின்சார மற்றும் இலத்திரனியல் பிரிவில் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் தனது பட்டப் படிப்பை நிறைவு செய்தார். இதனையடுத்து இவர் 2013 ஆம் ஆண்டு மொரட்டுவப் பல்கலைக் கழக்ததில் மின்சார நிறுவுகை பற்றிய MSc பட்டத்தை தொடர்ந்தார். இவர் PMP (USA) தகுதி வாய்ந்த ஒரு கருத் திட்ட முகாமையாளராவார். இவர் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் ஒரு பட்டயப் பொறியியலாளருமாவார்.

இவர் 2006 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கான ஒரு ஜப்பான் மைய மின் எந்திர ஒப்பந்தத் தரப்பான சின் நிப்பொன் எயார் ரெக்னொலஜீஸ் கம்பனியில் ஒரு மின்சார கருத் திட்டப் பொறியியலாளராக தனது தொழிலை ஆரம்பித்தார். அன்றிலிருந்து இன்று வரை, இவர் சீமென்ஸ் ஏஜி, பேர்ஜ் டுபாய், டுபாய் மோல், புதிய டோகா சர்வதேச விமான நிலையம், கட்டார் மரிஓட் ரெனெய்ஷன்ஸ் மற்றும் கொழும்பு சிற்றி சென்டெர் ஆகியன அடங்கலாக பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கருத் திட்டங்களில் MEP இற்கான கருத் திட்ட முகாமையாளர், பொது முகாமையாளர், ஒப்பந்தங்கள் முகாமையாளர் மற்றும் கருத் திட்ட முகாமைத்துவ திறமுறை நிபுணர் ஆகிய பதவிகள் உள்ளிட்ட பல பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

## பொறியியலாளர் எஸ்.ஏ.யூ.டீ.சி. சிறிவர்த்தன - பணிப்பாளர்

*B. Sc. Eng. (Hons) Sri Lanka, M. Sc. (Hydraulic Eng.) Netherlands, C. Eng., MIE (SL), M Cons. E (SL), M SLNCOLD (SL), Registered Structural Engineer (SL)*

இவர் 2020 ஆம் ஆண்டிலிருந்து சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் தற்பொழுது CESL இன் தாய் நிறுவனமான மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்தின் ஒரு மேலதிக பொது முகாமையாளராக (நீர் வளங்கள் திட்டமிடல்) பணியாற்றி வருகின்றார். சிறிவர்த்தன ஒரு நீரியல்வலு மற்றும் நிர்மாண பொறியியலாளராவார். இவர் நெதர்லாந்து IHE நெடுந்தீவு பல்கலைக்கழகத்தில் நீரியல்வலு பொறியியல் மற்றும் ஆற்றங்கரை அபிவிருத்தி பற்றிய விடயத்தில் தனது MSc பட்டத்தை பெற்றவராவார்.

இவர் இலங்கை பேராதெனிய பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் சிவில் பொறியியல் பிரிவில் தனது முதல் தர BSc பொறியியல் பட்டத்தை பெற்றுள்ளார். இவர் தனது முதல் தர பொறியியல் பட்டத்தை பெற்றதன் பின்னர் உடனடியாக அந்தப் பீடத்திற்கு ஒரு போதகராக இணைக்கப்பட்டார். பின்னர் இவர் 1997 ஆம் ஆண்டு இவரின் தற்போதைய நிறுவனமான மபொஉப இல் ஒரு வடிவமைப்பு பொறியியலாளராக இணைந்தார். அதனையடுத்து இவர் நிர்மாண வடிவமைப்புகள், நிர்மாண மேற்பார்வை மற்றும் கருத் திட்ட முகாமைத்துவம் முதலியன போன்ற விடயங்களில் ஒரு வதிவிடப் பொறியியலாளராகவும், ஒரு சிரேஷ்ட வடிவமைப்புகள் பொறியியலாளராகவும், ஒரு நிபுணத்துவ பொறியியலாளராகவும் மற்றும் ஒரு கருத் திட்ட முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர் 2009 ஆம் ஆண்டிலிருந்து ஒரு பிரதிப் பொது முகாமையாளராக (நீர் வளங்கள்) நியமிக்கப்பட்டார். இதனையடுத்து இவர் உள்நாட்டிலும் மற்றும் வெளிநாடுகளிலும் வேறுபட்டளவிலான நீர் வளங்கள் அபிவிருத்திக் கருத் திட்டங்களில் சம்பந்தப்பட்டு பணியாற்றியுள்ளார். இவர் 2015 ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தில் மேலதிக பொது முகாமையாளராக (நீர் வளங்கள் திட்டமிடல்) பதவியுயர்வு பெற்றார்.

இவர் நீரியல் மற்றும் நீரியல்வலு பொறியியல், நிர்மாணப் பொறியியல் மற்றும் நீர் வளங்கள் பொறியியல் ஆகிய பிரிவுகளில் நிபுணத்துவம் பெற்றவராவார். இவர் சகல வகையான கட்டிட நிர்மாணங்கள் நிமித்தம் இலங்கையில் சான்றுபெற்றுள்ள/பதிவுபெற்றுள்ள ஒரு நிர்மாண பொறியியலாளருமாவார். இவர் சிவில் பொறியியல் பிரிவில் 25 ஆண்டுகளுக்கும் அதிக கால அனுபவத்தை பெற்றவராவார்.

## டீ. மாபோபிட்டிய - பணிப்பாளர்

*ACA (SL) Chartered Accountant*

இவர் 2020 ஆம் ஆண்டிலிருந்து சபைக்கு ஒரு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். தற்பொழுது இவர் CESL இன் தாய் நிறுவனமான மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்தின் ஒரு பிரதிப் பொது முகாமையாளராக (நிதி) பணியாற்றுகின்றார்.

திரு மாபோபிட்டிய பல நாட்டு கூட்டுத்தாபன மற்றும் வங்கியியல் பிரிவுகளில் கணக்கியல் முகாமைத்துவம், நிதி மற்றும் கணக்காய்வு பணிகள் என்பவற்றில் பதவிக்கு பிந்தியகாலத்தில் 15 ஆண்டுகளுக்கும் அதிக கால அனுபவத்தை பெற்ற ஒரு தகுதிவாய்ந்த அதிகாரியாவார். இவர் 8 ஆண்டுகளாக KPMG மற்றும் PWC ஆகிய பிரதான சர்வதேச கணக்காய்வு நிறுவனங்களில் பணியாற்றி கணக்காய்வு உத்தரவாதம் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகிய விடயங்களில் செயன்முறை ரீதியில் பரந்த அனுபவமுடைய ஒரு அதிகாரியாவார். இவர் மபொஉப இல் இணைவதற்கு முன்னர், இவர் முகாமைத்துவ மட்டத்தில் DFCC வங்கி PLC இல் பணியாற்றியுள்ளார்.

# 04. பணிப்பாளர்களின் அறிக்கை

**கம்பனியின் விவகாரங்கள் பற்றி பணிப்பாளர்கள் முன்வைக்கும் வருடாந்த அறிக்கை**

சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபை 2021 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கு கணக்காய்வு செய்யப்பட்ட கம்பனியின் நிதி சார் கூற்றுக்கள் அடங்கிய அதன் வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றது. கம்பனியின் விவகாரங்கள் பற்றிய பணிப்பாளர்கள் சபையின் இந்த வருடாந்த அறிக்கை 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களை உள்ளடக்கியுள்ளது.

## பொதுவான விபரம்

சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கூட்டிணைந்த ஒரு நிறுவனமாகும். இது குறித்த இந்த கம்பனிக்கு ஒதுக்கப்பட்டுள்ள புதிய இலக்கமான PV 16723 என்ற இலக்கத்தின் கீழ் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் திகதி மீளபதிவு செய்யப்பட்டது.

## குறித்த ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கம்பனியின் முக்கிய செயற்பாடுகளும் மற்றும் செயலாற்றுகை மீளாய்வும்

கம்பனியின் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடுகள் நிதிக் கூற்று தொடர்பான 1.2 ஆம் இலக்க விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி கூற்றுக்கள் அடங்கிய இந்த அறிக்கை கம்பனியின் விவகார நிலையை பிரதிபலிக்கின்றன.

## நிதி கூற்றுக்கள்

பணிப்பாளர்கள் சபையின் சார்பாக இரண்டு பணிப்பாளர்களினாலும் மற்றும் கணக்காய்வாளர்களினாலும் உரிய முறையில் கையொப்பமிட்டு வெளிப்படுத்திய குறித்த விஷேட வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக கம்பனியின் நிதி கூற்றுக்கள் ஏற்புடைய கணக்கீட்டு நியமங்களுக்கும் மற்றும் சட்டமுறையான தேவைப்பாடுகளுக்கும் இணங்க தயாரிக்கப் பட்டு இந்த வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது அதன் இன்றியமையாத பாகமாகவும் காணப்படுகின்றது.

## சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை

இந்த கம்பனியின் நிதி கூற்றுக்கள் பற்றி சுயாதீன கணக்காய்வாளர்கள் முன்வைத்துள்ள அறிக்கை விபரம் பக்கம் 22 ஆம் முதல் 36 ஆம் வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

## கணக்கீட்டு கொள்கைகள்

கம்பனியின் நிதி கூற்றுக்களை தயாரித்த வேளையில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் இந்த வருடாந்த அறிக்கையின் 43 ஆம் முதல் 74 ஆம் வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. குறித்த இந்த கம்பனியின் நிதி கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs மற்றும் LKASs) இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. அதில் பின்பற்றிய கொள்கைகள் பற்றிய விபரங்கள் 43 ஆம் முதல் 74 ஆம் வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

## நிதி கூற்றுக்களை அறிக்கையிடுவதற்கான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்

கம்பனியினது விவகாரங்களின் உண்மையான நியாயமான நிலையை பிரதிபலிக்கும் வகையில் கம்பனியின் நிதி கூற்றுக்களை தயாரித்து வழங்குவது பணிப்பாளர்களின் பொறுப்பாகும்.

## நிதி கூற்றுக்களை அறிக்கையிடுவதற்கான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்

இந்த நிதி கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களினதும் (SLFRS/LKASs) மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினதும் தேவைப்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன என்பது பணிப்பாளர்கள் சபையின் அபிப்பிராயமாகும்.

## கணக்காய்வாளர்கள்

குறித்த மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில் தேசிய தணிக்கை அலுவலகம் கணக்காய்வாளர்களாக தொழிற்பட்டது.

## எடுத்துரைத்த மூலதனம்

இந்தக் கம்பனியின் எடுத்துரைத்த மூலதனம் 10,000,020/- ரூபாவாகும். இது 100,002 சாதாரண பங்குகளைப் பிரதிபலிக்கின்றது.

## ஒதுக்கீடுகள்

குறித்த ஆண்டு காலப் பகுதியில் நகர்வுகள் அடங்கலாக இந்தக் கம்பனியின் ஒதுக்கீடுகள் பற்றிய விபரங்கள் 40 ஆம் பக்கத்திலுள்ள ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## நியதிச்சட்டமுறையான கொடுப்பனவுகள்

இந்தக் கம்பனி செலுத்த வேண்டிய சகல வரிகளும், வரித்தீர்வைகளும் மற்றும் கட்டணங்களும் மற்றும் அதன் சார்பாகவும் கம்பனியின் ஊழியர்கள் தொடர்பாகவும் செலுத்த வேண்டிய சகல பங்களிப்புத் தொகைகளும் கட்டணங்களும் மற்றும் நிதி நிலைக் கூற்றுத் திகதியிலுள்ளவாறு கம்பனி செலுத்த வேண்டியிருந்த ஏனைய சகல நியதிச்சட்டமுறையான வரிகளும் செலுத்தப்பட்டுள்ளன அல்லது பொருத்தமானவிடத்து அவற்றுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் தமது அறிவுக்கு எட்டிய வகையில் உறுதிப்படுத்துகின்றனர்.

## ஐந்தொகைத் திகதிற்கு பின்னர் எழும் சம்பவங்கள்

நிதிக் கூற்றுக்களில் சீராக்கலை அல்லது வெளிப்படுத்துகையை தேவைப்படுத்தும் கணக்காய்வாளர்களனின் அறிக்கைத் திகதியில் எந்தவித பொருண்மையான சம்பவங்களும் எழவில்லை.

## நடத்தப்பட்டுள்ள கூட்டங்களும் மற்றும் வரவும் பற்றிய விபரங்கள்

குறித்த 2021 நிதி ஆண்டு காலப் பகுதியில் பணிப்பாளர்கள் சபை 08 சந்தர்ப்பங்களில் கூடியது. குறித்த கூட்டங்களுக்கு பணிப்பாளர்கள் சபையின் பணிப்பாளர்கள் சமூகமளித்திருந்த வரவு பற்றிய விபரங்கள் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| பெயர் | பதவி | 2021 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சனவரி 27 | பெப்ருவரி 24 | மார்ச் 30 | யூன் 01 | யூலை 29 | ஒற்றோபர் 06 | நவம்பர் 30 | திசம்பர் 30 |
| பொறியிய. யூ.எஸ். கருனாரத்ன | தலைவர் | √ | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A |
| பொறியியலாளர் கே.டபிள்யூ. ஜவன் டி சில்வா | தலைவர் | N/A | √ | √ | √ | √ | √ | √ | √ |
| பொறியியலாளர் ஜி. ஆர். ஏ. எஸ். குணதிலக்க | பணிப்பாளர் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| பொறியியலாளர் கே.எச். நலின் சன்ஜய த சில்வா | பணிப்பாளர் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| திரு டீ. மாபோபிட்டிய | பணிப்பாளர் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| திரு அனுர திஸாநாயக்க | பணிப்பாளர் | N/A | N/A | N/A | √ | √ | √ | √ | √ |
| திரு. பி.கே.ஆர்.பாலசூரியா | பணிப்பாளர் | N/A | N/A | N/A | √ | √ | √ | √ | √ |

# 05. கணக்காய்வுக் குழு அறிக்கை

## கணக்காய்வு குழுவின் வகிபங்கு

CESL நிறுவன கணக்காய்வு குழு இந்த CESL நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்படுகின்றது.

## நடத்தப்பட்டுள்ள கூட்டங்களும் மற்றும் வரவும் பற்றிய விபரங்கள்

2021 நிதி ஆண்டு காலப் பகுதியில் கணக்காய்வு குழு 02 சந்தர்ப்பங்களில் கூடியது. குறித்த கூட்டங்களுக்கு கணக்காய்வு குழுவினது உறுப்பினர்கள் சமூகமளித்திருந்த வரவு பற்றிய விபரங்கள் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| பெயர் | பதவி | 2021 | |
|---|---|---|---|
| | | மார்ச் 25 | ஒற்றோபர் 22 |
| பொறியிலாளர் எஸ்.ஏ.யூ.டீ.சி. சிறிவர்த்தன | குழுவின் தலைவர் | √ | √ |
| பொறியியலாளர் கே.எச். நலின் சன்ஜய த சில்வா | பணிப்பாளர் | √ | √ |
| பொறியியலாளர் ஜி. ஆர். ஏ. எஸ். குணதிலக்க | பணிப்பாளர் | √ | √ |

## குழுவின் நோக்கெல்லை

a) உள்ள கணக்காய்வு பிரிவினது பொறுப்புக்களை நிர்ணயித்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வு திட்டத்தை மீளாய்வு செய்தல்.
b) நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயற்பாடுகளுக்குமான உள்ளக கட்டுப்பாடு சார்ந்த முறைமைகளை மதிப்பிடுதல் மற்றும் மீளாய்வு செய்தல்.
c) ஆகுசெலவு பயன்தகு தன்மையின் நிமித்தமும் மற்றும் அநாவசியமான செலவுகள் முதலியவற்றை ஒழிக்கும் பொருட்டும் வழமையான கால செயலாற்றுகை கரும விடயங்களை மீளாய்வு செய்தல்.
d) வெளிவாரி கணக்காய்வாளர்களுடன் ஒருங்கிணைந்து கணக்காய்வாளர் அதிபதியின்/வெளிவாரி கணக்காய்வாளர்களின் முகாமைத்துவ ஆவண அறிவுரைகளை பின்பற்றல்.
e) நியதிச்சட்டங்கள், ஒழுங்குவிதிகள், விதிமுறைகள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பன அனுசரிக்கப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்தல்.
f) கணக்கீட்டு நியமங்கள் அனுசரிக்கப்படுகின்றனவா என உறுதிசெய்து கொள்ளும் பொரட்டு நிதி கூற்றுக்களை மீளாய்வு செய்தல்.
g) பரிகார நடவடிக்கைகளின் நிமித்தம் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள்/வெளிவாரி கணக்காய்வாளர் அறிக்கைகள், முகாமைத்துவ ஆவணங்கள் என்பவற்றை மீளாய்வு செய்தல்.
h) பொது தொழில்முயற்சி பற்றிய குழுவின் சிபாரிசுகளை/பணிப்புரைகளை செயற்படுத்தும் விடயத்தை மீளாய்வு செய்தல்.

## அதிகாரம்

i) குழுவுக்கு அதன் விடய குறிப்பு நியதிகளினுள் உரிய செயற்பாடுகளை நிறைவேற்றும் முகமாக பணிப்பாளர்கள் சபையின் மூலமாக அதிகாரம் அளிக்கப்படுகின்றது. எவரேனும் ஊழியர் ஒருவரிடம் இருந்து அதற்கு தேவையான ஏதாவது தகவல்களை கோருவதற்கும் இந்த குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது. ஆகையால் குழு கோரும் ஏதாவது தகவல்களை வழங்க சகல ஊழியர்களும் ஒத்துழைக்க வேண்டும் என பணிக்கப்படுகின்றனர்.

ii) குழு தான் அவதானிக்கின்ற ஏதாவது சந்தேகத்திற்கிடமான மோசடிகள் அல்லது முறைகேடுகள் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறிவுகள் அல்லது சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் சந்தேகத்திற்கிடமான மீறல்கள் என்பன பற்றி பணிப்பாளர்கள் சபைக்கு அறிக்கையிடும் அதிகாரத்தை கொண்டுள்ளது.

iii) வெளிவாரி தரப்புகளிடமிருந்து அல்லது சுயாதீன தொழில் தேர்ச்சி தரப்புகளிடமிருந்து சட்டசார் ஆலோசனையை பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் தனக்கு தேவை என கருதும் பட்சத்தில் வெளிவாரி தரப்புகளினதும் மற்றும் பொருத்தமான அனுபவம் வாய்ந்த நிபுணர்களினதும் உதவியை நாடுவதற்கும் இந்த குழு அதிகாரத்தை கொண்டுள்ளது.

# 06. சேவை சார்ந்த துறைகள்

## கட்டிடங்கள்

இந்த CESL நிறுவனம் வடிவமைப்பு மற்றும் நிர்மாண அடிப்படையில் கட்டிட வடிவமைப்பு நிர்மாணத்தில் முதன்னிலை வகித்து வந்துள்ளது. இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள நிர்மாண பணி நாடு முழுதிலும் ஒட்டுமொத்த நகர அபிவிருத்திகள் அடங்கலாக (பல மாடி கட்டிடங்கள், தொழிற்சாலை வகுதி கட்டிடங்கள், கண்ணுக்கினிய வகுதி கட்டிடங்கள் முதலியன) பல வகையான கட்டிட வகுதிகளை உள்ளடக்குகின்றது.

அண்மையில், இந்த CESL நிறுவனம் தொல்பொருள் ரீதியில் பெறுமதியும் மற்றும் முக்கியத்துவமும் வாய்ந்த கட்டிடங்களின் புனர்நிர்மாண மற்றும் புதுப்பித்தல் பணிகளையும் மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளது.

இந்த CESL நிறுவனம் தனது உள்ளக நிபுணத்துவத்தில் பெருமளவு தங்கி இருக்கின்றது. எனினும், விஷேடமான பிரிவுகளை பொறுத்த வரையில், **CESL** நிறுவனம் தனது கருத் திட்ட பணி குழுக்களை வலுப்படுத்துவதற்கும் மற்றும் ஒரு கருத் திட்டத்தின் குறித்த தேவைப்பாடுகளை கையாளுவதற்கும் என புகழ்பெற்ற கட்டிடக்கலைஞர்கள் போன்ற பொருத்தமான நிபுணர்களை பணியில் ஈடுபடுத்துகின்றது.

கட்டிட வகைகள்;

- வைத்தியசாலை கட்டிடங்கள்
- வர்த்தக கட்டிடங்கள்
- நிருவாக அலுவலக கட்டிடங்கள்
- தங்குமிடவசதி கட்டிடங்கள்
- பொழுதுபோக்கு வசதி கட்டிடங்கள்
- முனைய கட்டிடங்கள்
- பொது கட்டிடங்கள்
- நீதிமன்ற கட்டிடத்தொகுதிகள்
- விளையாட்டு அரங்குகள்
- சிறைச்சாலை கட்டிடத்தொகுதி








## வீதிகள்

CESL நிறுவனம், இலங்கையில் வீதிகள் திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணம் ஆகிய விடயங்களில் பல வருட அனுபவத்தை கொண்டுள்ளது. பின்வரும் கரும விடயங்கள் இந்த நிறுவனத்தின் வளமான அனுபவத்தில் அடங்குகின்றன;

- கணை வடிவ வீதிகள், பக்க வீதிகள், உயர்ந்த வீதிகள் முதலிவற்றின் நிர்மாணம் மற்றும் ஏற்கெனவேயுள்ள வீதிகளை விசாலமாக்கல், புனர்நிர்மாணித்தல், மேம்படுத்துதல் மற்றும் மீள செப்பனிடுதல்.
- பாதுகாப்பு தண்டவாளங்கள், வீதி தளபாடங்கள் முதலியவற்றின் நிர்மாணம்.





## பாலங்களும் மற்றும் மதகுகளும்

CESL நிறுவனம் நாட்டில் பாலங்களையும் மதகுகளையும் வடிவமைத்து நிர்மாணிப்பதில் பரந்த அனுபவத்தை கொண்டுள்ளது.

இந்த CESL நிறுவனம் பல ஆண்டுகளாக பின்வருவனவற்றின் வடிவமைப்பு, நிர்மாணம் மற்றும் நிறுவுகை ஆகிய பணிகளில் நன் மதிப்பை பெற்றுள்ளது;

- கொங்கிறீட்டு மற்றும் உருக்கு மேன்பாலங்கள்
- கொங்கிறீட்டு, உருக்கு மற்றும் கலப்பு பாலங்கள்
- பாதசாரி பாலங்கள், கடவை பாலங்கள்
- ஏற்கெனவேயிருக்கின்ற பாலங்களின் புனர்நிர்மாணம் மற்றும் மீள வலுப்படுத்தல்
- மதகுகள், நிரல் வீதி ஓர வடிகாலமைப்புகள் மற்றும் அப்பால்செல் வடிகாலமைப்பு முறைமைகள் போன்ற வடிகாலமைப்பு கட்டிடங்கள் நிர்மாணமானங்கள்





## நீர்ப்பாசன நிர்மாணங்கள்

நீர்ப்பாசன துறையில், இந்த CESL நிறுவனத்தினது பொறியியல் நிபுணர்கள் பின்வரும் விடய அம்சங்கள் அடங்கலாக பாரியளவான நீர்ப்பாசன கருத் திட்டங்களை வடிவமைத்தல், திட்டமிடுதல் மற்றும் திறந்து வைத்தல் ஆகிய கரும பணிகளின் நிமித்தம் உதவுகின்றனர்;

- விஸ்தரிப்பு
- நீர்த்தேக்கங்கள் நிர்மாணமும் மற்றும் புனர்நிர்மாணமும்
- கால்வாய்கள்
- அணைக்கட்டுகள்
- மண் அணைக்கட்டுகள்
- வழமையான கட்டமைப்புகள்
- அணைகள்
- நீர்வலு நிர்மாணங்கள்





## ஏனைய விஷேட வசதிகள்

இந்த CESL நிறுவனம் பின்வரும் ஏனைய துறைகளிலும் விஷேட வசதிகள் வடிவமைப்பு, திட்டமிடல் மற்றும் நிர்மாணம் ஆகிய கரும பணிகளுக்கும் தனது பங்களிப்பை செய்துள்ளது;

- மிருகக்காட்சி சாலைகள் மற்றும் சவாரி பூங்காக்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்தல்
- உயிர் பல்லினத்துவ பூங்காக்கள்
- விளையாட்டு மைதானங்கள்
- கழிவுநீர் மற்றும் நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதிகள்










# 07.

# வணிக செயற்பாடுகளின் மீளாய்வு







# கொழும்பு மாவட்டத்தில் பொதுத்துறை ஊழியர்களுக்கான "நில பியச" உத்தியோகபூர்வ பங்களா நிர்மாணம்

- **வாடிக்கையாளர் தரப்பு:**
  பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
- **ஒப்பந்த தொகை:** 921 மில்லியன் இ.ரூ.
- **நிறைவுசெய்த திகதி:** 2021.10.15














# கம்பளை நீதிமன்றக் கட்டிடத்தொகுதி நிர்மாணம்

- **வாடிக்கையாளர் தரப்பு:**
  நிதி அமைச்சு
- **ஒப்பந்த தொகை:** 347 மில்லியன் இ.ரூ.
- **நிறைவுசெய்த திகதி:** 2021




















## கண்டி, பொது மருத்துவமனை, புற்றுநோய் சிகிச்சை நிலைய நிர்மாணம் - கட்டம் I

- **வாடிக்கையாளர் தரப்பு:** சுகாதார போஷாக்கு மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சு
- **ஒப்பந்த தொகை:** 345 மில்லியன் இ.ரூ.
- **நிறைவுசெய்த திகதி:** 2021.10.31











## கிளிநொச்சி நீதிமன்றக் கட்டிடத்தொகுதி நிர்மாணம்

- **வாடிக்கையாளர் தரப்பு:** நிதி அமைச்சு
- **ஒப்பந்த தொகை:** 330 மில்லியன் இ.ரூ.
- **நிறைவுசெய்த திகதி:** 2021.03.23





## மொனராகலை மாவட்டத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்கான கட்டிட நிர்மாணம்

- **வாடிக்கையாளர் தரப்பு:** பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
- **ஒப்பந்த தொகை:** 289 மில்லியன் இ.ரூ.
- **நிறைவுசெய்த திகதி:** 2021.12.02






## கஹட்டகஸ்திகிலிய மாவட்ட நீதிவான் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி நிர்மாணம்

- **வாடிக்கையாளர் தரப்பு:** நீதி அமைச்சு
- **ஒப்பந்த தொகை:** 84 மில்லியன் இ.ரூ.
- **நிறைவுசெய்த திகதி:** 2021.07.09







# 08. நிதி கூற்றுக்கள்

- சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை
- முழுமையான வருமான கூற்று
- நிதி நிலை கூற்று
- ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று
- காசுப் பாய்ச்சல் கூற்று
- நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்



ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No.
CAE/B/CESL/09/FA/2021/09

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
27 August 2022

The Chairman,

Central Engineering Services (Private) Limited

**Report of the Auditor General on the Financial Statements and Other Legal and Regulatory Requirements of the Central Engineering Services (Private) Limited for the year ended 31 December 2021 in terms of Section 12 of the National Audit Act, No. 19 of 2018.**

---

The above mentioned report together with audited financial statements is sent herewith.

W.P.C. Wickramaratne

**Auditor General**

Copies to : 1. The Secretary, Ministry of Irrigation

2. The Secretary, Ministry of Finance

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.

+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } சீஎன்/பி/சீஎஸ்எல்/09/எப்ஏ/2021/09

මබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2022 ஆகஸ்ட் 27

தலைவர்

சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்

**சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட் இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட் ("கம்பனி") இன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் படியான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் (எல்.கே.ஏ.எஸ்.) 1 – நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் என்பதன் 32 ஆம் பந்திக்கு முரணாக முறையே ரூபா 183.04 மில்லியன் மற்றும் ரூபா 38.04 மில்லியன் கூட்டுத்தொகையான கடன்பட்டோர் செலவு மீதிகள் மற்றும் வேலை ஆரம்பித்தல் முற்பணங்களின் வரவு மீதிகள் 36 சந்தர்ப்பங்களில் அவ்வாறான கணக்கு களின் வரவு மீதிகளிற்கும் செலவு மீதிகளிற்கும் எதிரீடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக, நடைமுறைச் சொத்துக்களும் நடைமுறைப் பொறுப்புக்களும் அத்தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(ஆ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 3,553.87 மில்லியன் பெறுமதியான வியாபார கடன்பட்டோரிடமிருந்து உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கைத் திகதி வரை எவ்வித உறுதிப்படுத்தலும் கிடைத்திருக்கவில்லை. மேலும், கணக்காய்விற்கு கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு ஏறத்தாழ ரூபா 1,200 மில்லியன் பெறுமதிக்கு மாத்திரமே சான்றுறுதிப்படுத்திய பட்டியல்கள் காணப்படுவதாக உறுதிப்படுத்தப் பட்டிருந்தது. அத்துடன், ரூபா 550 மில்லியன் கடன்பட்டோர் மீதிகளிற்காக எவ்வித பதிவேடுகளும் பேணப்பட்டிருக்கவில்லை என்பதாக கம்பனியின் அநுராதபுரம் தள அலுவலகத்தின் பிரதான செயற்பாட்டுப் பொறியியலாளர் அறிவித்திருந்தார். எவ்வாறாயினும், இத்தொகையும் அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இவற்றின் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 3,553.87 மில்லியன் கடன்பட்டோர் மீதிகளின் காணப்படும் தன்மை மற்றும் சரியான தன்மையை கணக்காய்வில் மதிப்பீடு செய்ய முடிந்திருக்கவில்லை.

(இ) நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 2.3.6 இன் படி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கை காலத்தை கம்பனி ஆண்டுதோறும் மீளாய்வு செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எல்கேஏஎஸ். 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்ற நியமத்தின் 51 ஆவது பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஏறத்தாழ ரூபா 429.78 மில்லியன் கிரயமான அல்லது மொத்தக் கிரயத்தில் 30 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற முழுமையாகத் தேய்விடப்பட்ட அவ்வாறான சொத்துக்களின் பயன்தரு பொருளியல் ஆயுட் காலம் மீளமதிப்பீடு செய்யப்பட்டு, எல்கேஏஎஸ் 8 –கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் என்ற நியமத்தின் படி நிதிக் கூற்றுக்களில் சரியான முன் கொண்டு செல்லும் பெறுமதியைக் காண்பிக்காது கம்பனியால் அச்சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஈ) குறைத்தெழுதிய ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (PPE) மற்றும் உறவுமுறைத் தரப்புக்குச் செலுத்த வேண்டிய தொகை தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட தொகைகளிற்கும் நேரொத்த பட்டியல்களில் காண்பிக்கப்பட்டிருந்த தொகைகளிற்கும் இடையே ரூபா 20.65 மில்லியன் கூட்டுத்தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(உ) கம்பனியின் சரக்கிருப்பின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 105,091,340 தொகையான ஆரம்ப முடிவுறா வேலைகள் (டபிள்யுஜபி) 2021 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட மற்றும் பட்டியலிடப்பட்ட தொகையாகக் கருதி மீளாய்வாண்டில் அகற்றப்பட்டிருந்தது. இருப்பினும், அதில் உள்ளடங்கியிருந்த ரூபா 24,833,281 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை முழுமையடையாமலும் பட்டியலிடப்படாதும் இருந்தமை அவதானி க்கப்பட்டமையால், நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்பு 2.6 இல் வெளிப்படுத்தியுள்ள தகவல்கள் முற்றிலும் தவறானதாகும்.

(ஊ) கம்பனியின் இரண்டு தள அலுவலகங்களால் (அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை) தாய்க் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 21.97 மில்லியன் தொகைக்குரிய விபரமான பட்டோலைகள் மற்றும் ஏனைய ஆதாரப்படுத்தல் ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(எ) 03 செயற்திட்ட வேலைத்தளங்கள் மற்றும் பத்தரமுல்லை (WP-1 Base) பிரதான களஞ்சியத்தில் நடத்தப்பட்ட பௌதீக சரக்கிருப்பு சரிபார்ப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11.77 மில்லியன் கையிருப்பு பற்றாக்குறையாக இருப்பதும் ரூபா 1.5 மில்லியன் கையிருப்பு அதிகமாக இருப்பதும் தெரியவந்துள்ளது. அதே வேளை ரூபா 1,042,413 கிரயமான நிலையான சொத்துக்கள் கம்பனியின் WP-1 தளத்தின் சரக்கிருப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இருப்புச் சரிபார்ப்புக் குழுக்களால் தெரிவிக்கப்பட்ட ஏனைய பொருண்மையான குறைபாடுகள் உள்ளிட்ட மேற்கூறிய விடயங்கள் கம்பனியால் சரக்கிருப்பில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வருடாந்த சரக்கிருப்பை இனங்கண்டு அவற்றை அதற்கேற்ப சரிபார்ப்பதற்கு முடியுமான விதத்தில் கம்பனி அதன் சரக்கிருப்புக்களிற்கு சரியாக குறியீடு செய்திருக்கவில்லை என்பதுடன் அந்த குறியீடுகள் ஈஆர்பி கணனி முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்கவுமில்லை.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 1,027.02 மில்லியன் தொகையான சரக்கிருப்பின் சரியான தன்மையை கணக்காய்வில் மதிப்பீடு செய்ய முடிந்திருக்கவில்லை.

(ஏ) கம்பனியினால் ரூபா 1,653,804,990 மற்றும் ரூபா 2,078,338,828 கூட்டுத்தொகைகள் முறையே அதன் தாய்க் கம்பனியிடமிருந்து பெற வேண்டிய வியாபார வருமதிகள் மற்றும் பிடிகாசு வருமதிகள் என இனங்காணப்பட்டிருந்த அதேவேளை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் தாய்க் கம்பனியிக்கு செலுத்த வேண்டிய வேலை ஆரம்பித்தல் முற்பணமாக ரூபா 3,345,272,654 கூட்டுத்தொகை இனங்காணப்பட் டிருந்தது. இருப்பினும், தாய்க் கம்பனியினால் அதன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் இந்த நேரொத்த தொகைகள் முறையே ரூபா 1,643,727,470 ரூபா 2,010,467,225 மற்றும் ரூபா 3,320,415,563 எனக் காணப்பிக்கப்பட்டிருந்தது. ஆகையால், மேற்குறிப்பிட்ட 03 மீதிகளிற்கும் இடையே முறையே ரூபா 10,077,520 ரூபா 67,872,603 மற்றும் ரூபா 24,857,091 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. எவ்வாறாயினும், மேற்குறித்த வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தளங்களின் துணை பிரிவுகளிற்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்கள் நீக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், கம்பனியின் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பட்டோலையிலுள்ள கம்பனியிடமிருந்தே பெறவேண்டிய மற்றும் கம்பனிக்கே செலுத்தப்பட வேண்டிய தொகைகளாகக் காட்டப்பட்டுள்ள முறையே ரூபா 116,860,830 மற்றும் ரூபா 2,596,405 அவ்வாறு நீக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) நிதி நிலைமைக் கூற்றின் படி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பரிமாற்றத்தில் இருந்த காசு ரூபா 186,124,863 ஆனதுடன் அத்தொகை 2021 திசெம்பர் 31 இல் காணப்பட்ட நிலுவைக் கடன்பட்டோரை தீர்ப்பதற்காக தாய்க் கம்பனியால் (அதாவது மத்திய பொறியியல் மதியுரைப் பணியகம்) வழங்கப்பட்ட 06 காசோலைகளை உள்ளடக்கியுள்ளதாக கணக்காய்விற்கு கம்பனி தெரிவித்திருந்தது. இருப்பினும், வழங்கப்பட்ட அந்த 06 காசோலைகளின் உண்மையான பெறுமதி ரூபா 197,852,894 ஆகும். எனவே, தாய் கம்பனியால் வழங்கப்பட்ட காசோலைகளின் பெறுமதிக்கும் கணக்குகளில் அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கும் இடையே ரூபா 11,748,930 வேறுபாடு காணப்பட்டது. மேலும், இந்த காசோலைகள் 2021 சனவரி மாதத்திலேயே வைப்புச் செய்யப்பட்டிருந்தன.

இதனிடையே, மேற்குறிப்பிட்ட பரிமாற்றத்திலுள்ள காசு மீதி தொடர்பில் விரிவான பட்டோலையில் காட்டப்பட்டுள்ள தொகைக்கும் அறிக்கையிடப்பட்ட தேதியின் படியான நிதிக்கூற்றுக்களிற்கும் இடையே மேலும் ரூபா 20,900 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 கம்பனியின் 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள் கம்பனியின் 2021 ஆம் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கியது. ஆனால் இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தும் முடிவுரையினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை *பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில்* வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

கம்பனியின் 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை நான் வாசிக்கையில் அதில் பொருண்மையான பிழையாகக் காட்டுதல் உள்ளது என முடிவுக்கு வந்தால் சரிசெய்வதற்காக நிருவகிக்கின்ற தரப்பினர்கக்கு இவ்விடயங்களைத் நான் தெரியப்படுத்துதல் வேண்டும். இன்னும் சரிசெய்யப்படாத பொருண்மையான பிழையாகக் காட்டுதல்கள் இருக்குமாயிருந்தால் அவற்றை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனி தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் மற்றும் கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் கம்பனியின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.5 கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும்.

நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக கம்பனியின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் கம்பனி தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் (கம்பனிகளுக்கு மாத்திரம் பொருத்தமானது) பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) பிரிவில் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை கம்பனி பேணி வந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ை)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் அங்கத்தவர்கள் எவருக்கும் கம்பனி சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

2.2.2 பின்வருவனவற்றைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது கம்பனியின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

| விதிகள்/ வழிகாட்டல்களுக்கான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | |
| (i) 6.5.3 ஆம் பந்தி | கம்பனியின் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை இந்த அறிக்கைத் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 9.3.1 ஆம் பந்தி | கம்பனி அதற்கென ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் ஒன்றைத் தயாரித்து 2022 மே 31 வரை அதற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. |
| (iii) 4.2.5 ஆம் பந்தி | இருப்புக்கள் மீதான காலப் பகுப்பாய்வு மாதாந்த அடிப்ப டையில் பணிப்பாளர் சபையின் மீளாய்வுக்கும் கலந்துரை யாடலுக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், கம்பனி அதன் ஈ.ஆர்.பி. முறைமையிலிருந்து இருப்பு காலப் பகுப்பாய்வு அறிக்கையை உருவாக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. ஆகையால், இருப்புக் காலப்ப குப்பாய்வின் அடிப்படையில் மெதுவாக நகர்கின்ற, அசைவு றாதுள்ள மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இருப்புக்களை கண்டறிவதில் கம்பனி சிரமத்தை எதிர் கொண்டுள்ளது. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் கடமைகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என

2.2.4 பின்வருவனவற்றைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக காலஎல்லைக்குள் சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது என.

(அ) கிடைக்கக் கூடியதாகவுள்ள தகவல்களின் படி, ரூபா 15இ425இ266 தொகைக்கு இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள காணியொன்றை கம்பனி 30 ஆண்டுகால குத்தகையின் கீழ் 2019 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA) இடமிருந்து பெற்றுக் கொண்டிருந்தது. இந்தக் காணியானது சொத்தைப் பயன்படுத்தும் உரித்து என கம்பனியால் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திடும் செயல்முறை இந்த அறிக்கைத் திகதி வரையிலும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த ஆதனம் 03 ஆண்டுகள் கடந்த பின்னரும் இதுவரை எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் WP-2 தளத்தின் கொள்வனவு நடவடிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில், கம்பனிக்கு நிதி ரீதியாக மிகவும் அநுகூலமான மற்றும் சிறந்த சேவைகளைப் பெறுவதற்காக தரம் வாய்ந்த முறையில் பொருட்கள் மற்றும் சேவைகளை கம்பனி கொள்வனவு செய்திருக்கவில்லை என்பது பின்வரும் காரணங்களால் தெரியவந்தது.

- அரசாங்க கொள்வனவு வழிகாட்டுதல்களின் 6.2.2 ஆம் வழிகாட்டுதலின் படி 4 சந்தர்ப்பங்களில் ரூபா 15,542,729 பெறுமதியான கொள்வனவுகளிற்காக தேவைப்பப்பட்ட ஆகக் குறைந்த கூறுவிலைகளை சமர்ப்பிப்பதற்கான காலத்தை வழங்கத் தவறியிருந்தமை

- ரூபா 3,263,270 மதிப்புள்ள கொள்வனவுகள் தொடர்பாக பொறியாளரின் மதிப்பீட்டுக்கும் வழங்குனர்களின் விலைகளிற்கும் இடையே 3 சந்தர்ப்பங்களில் கணிசமான வேறுபாடுகள் காணப்பட்டமை.

- நீண்ட காலத்திற்கு திறந்த நிலையில் கொள்வனவுக் கட்டளைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் வழங்குனர்களுடன் எந்த ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்பட்டி ருக்காமை.

- கணிசமான அளவு சிமெந்துப் பக்கட்டுக்கள் மத்திய மயப்படுத்தப்பட்ட கொள்வனவு முறையைக் கடைப்பிடிக்காமல், கம்பனியின் தனிப்பட்ட தளங்களால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதனால், 04 சந்தர்ப்பங்களில் மாத்திரம் ரூபா 2,400,894 இழப்பு கம்பனிக்கு ஏற்பட்டிருந்தமை.

(இ) கொள்வனவு வழிகாட்டல்களின் 5.4.4 (iii) ஆம் வழிகாட்டலின் படி, செயற்திட்ட வேலைகள் 90 சதவீத பூர்த்தி நிலையை அடையும் போது வேலை ஆரம்பித்தல் முற்பணங்கள் முழுமையாக தீர்க்கப்படுதல் வேண்டும். எனினும், கம்பனியின் 04 தள அலுவலகங்களிற்குரிய முழுமையாக பூர்த்திசெய்யப்பட்ட மற்றும் 90 சதவீதம் பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாண செயற்திட்டங்கள் தொடர்பில் கிடைத்திருந்த ரூபா 104.55 மில்லியன் தொகையான வேலை ஆரம்பித்தல் முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படாது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளில் தொடர்ந்தும் வைத்திருக்கப்பட்டுள்ளது.

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மொத்த வேலை ஆரம்பித்தல் முற்பண மீதிகள் ரூபா 5,205.81 மில்லியன் ஆனதுடன் அதில் ரூபா 3,345.2 மில்லியன் தொகை அரசாங்க மற்றும் அரை அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பல்வேறு நிர்மாணச் செயற்திட்டங்களை மேற்கொள்வதற்காக முன்னைய ஆண்டுகளில் பெறப்பட்டவயைாகும். அவ்வாறு பெறப் பட்ட ரூபா 1,049.038 மில்லியன் தொகை 2022 மே 31 வரையிலும் குறித்த அரசாங்க நிறுவனங்களிற்கு மீளளிக்கப்படாது 03 ஆண்டுகளிற்கும் மேலாக தொடர்ந்தும் கம்பனியினால் பயன்படுத்தி வரப்படுகின்றது.

## 2.5 ஏனைய அவதானிப்புகள்

(அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாடிக்கையாளரிடமிருந்து பெற வேண்டிய (Due from Customers) மற்றும் வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய (Due to Customers) மீதிகள் முறையே ரூபா 1,496.22 மில்லியன் மற்றும் ரூபா 2,506.08 மில்லியன் ஆகும். இருப்பினும், கம்பனியால் கையேற்கப்பட்ட செயற்திட்ட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் வாடிக்கையாளரிடமிருந்து பெற வேண்டிய அல்லது வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவையெதுவும் காணப்படக்கூடாது. எவ்வாறாயினும், பூர்த்தியாக்கப்பட்ட 63 செயற்திட்டங்களுடன் தொடர்புயை ரூபா 267.75 மில்லியன் மீதிகள், அந்தக் கணக்கு மீதிகளை அகற்றுவதற்காக உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளாது வாடிக்கையாளர் களிடமிருந்து பெற வேண்டிய மற்றும் வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவையாக அறிக்கையிடல் காலத்தின் இறுதியில் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) கம்பனியின் தலைமை அலுவலகத்தால் காசு முறையினைப் பின்பற்றி அனைத்து பெறுமதி சேர்வரி (VAT) கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், அந்த VAT கொடுப்பனவுகளை பதிவு செய்வதற்காக அட்டுறு முறை பின்பற்றப்படுகின்றது. அதன் விளைவாக காசு முறையிலும் அட்டுறு முறையிலும் பதிவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்களிற்கு இடையே ரூபா 330.83 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த முரண்பாடை கணக்கிணக்கம் செய்வதற்காக கம்பனி மாதாந்த கணக்கிணக்க செயல் முறையினை பேணியிருக்கவில்லை.

(இ) கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், கம்பனியின் பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாண செயற்திட்டங்களிலிருந்து 2021, 2020 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 888.15 மில்லியன், ரூபா 973.3 மில்லியன் மற்றும் ரூபா 722.8 மில்லியன் மொத்த நட்டமொன்று கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது. அத்துடன், மீளாய்வாண்டில் இடம்பெற்று வருகின்ற மேலும் 45 நிர்மாண செயற்திட்டங்களிலிருந்து ரூபா 327.52 மில்லியன் நட்டமொன்று அறிவிக்கப்பட்டுள்ளது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) குறிப்பிடத்தக்க நட்டத்துடன் பூர்த்தியாக்கப்பட்டிருந்த செயற்திட்டங்கள்

| தள அலுவலக பெயர் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | | | செயற்திட்ட நட்டம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2019 | 2021 ரூபா மில். | 2020 ரூபா மில். | 2019 ரூபா மில். |
| தென்கிழக்கு | 13 | - | 6 | 267.19 | - | 45.9 |
| டபிள்யூபி 2 | 5 | 5 | 8 | 11.97 | 7.6 | 13.6 |
| டபிள்யூபி 1 | - | - | 4 | - | - | 6.2 |
| மத்திய | 6 | 14 | 6 | 9.18 | 41.1 | 22.2 |
| வடக்கு | 2 | 1 | 1 | 34.14 | 32.8 | 29.7 |
| சப்ரகமுவா | 1 | - | 1 | 13.36 | - | 1.8 |
| தெற்கு | 21 | 21 | 15 | 170.79 | 176 | 169.2 |
| ஊவா | 11 | 5 | 2 | 128.24 | 30.8 | 8.6 |
| வடமத்திய - அநுராதபுரம் | 30 | 84 | 72 | 185.91 | 406 | 315.3 |
| எம்கேடீபி - பொலன்னறுவ | 11 | 54 | 35 | 47.7 | 279 | 110.3 |
| கிழக்கு | - | - | - | - | - | - |
| வடமேற்கு | 3 | - | - | 19.67 | - | - |
| | **103** | **184** | **150** | **888.15** | **973.3** | **722.8** |

(ii) நட்டத்துடன் செயற்படுத்தப்பட்டு வருகின்ற செயற்திட்டங்கள்

| தள அலுவலகத்தின் பெயர் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறிவிக்கப்பட்ட நட்டம் ரூபா மில். |
|---|---|---|
| மத்திய | 13 | 36.93 |
| கிழக்கு | 6 | 80.58 |
| சப்ரகமுவ | 1 | 6.15 |
| தெற்கு | 1 | 7.86 |
| டபிள்யூபி 1 | 1 | 10.25 |
| வட மேற்கு | 1 | 5.7 |
| டபிள்யூபி 2 | 9 | 95.03 |
| ஊவா | 13 | 85.02 |
| | **45** | **327.52** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த நிலைமை கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மையை நேரடியாகப் பாதிக்கின்றமையால் இந்த நட்டங்களுக்கான காரணங்களையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதற்குப் பொறுப்பான நபர்களையும் கண்டறிந்து, இந்த வகையான பெரும் நட்டங்களைக் குறைப்பதற்கும் தவிர்ப்பதற்கும் முகாமைத்துவம் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

(ii) மேற்கூறிய 103 முழுமையாக பூரணப்படுத்திய செயற்திட்டங்களில், 86 செயற்திட்டங்கள் அல்லது 83 சதவீதமானவை ரூபா 799.83 மில்லியன் மொத்த செயற்பாட்டு நட்டத்துடன் பிரதானமாக வடமத்திய (அனுராதபுரம்), MKDP (பொலன்னறுவை), தெற்கு, தென் கிழக்கு மற்றும் ஊவா ஆகிய 05 தள அலுவலகங்களால் பூரணப்படுத்தப்பட்டிருந்தன.

(iii) இணங்கப்பட்ட ஒப்பந்த காலத்தில் பெரும்பாலான செயற்திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு கம்பனிக்கு முடிந்திருக்கவில்லை. கம்பனியின் சப்ரகமுவ தளத்தினால் செயற்திட்டப் பணிகளை முடிப்பதில் 69 நாட்கள் முதல் 436 நாட்கள் வரையிலான கணிசமான காலதாமதம் ஏற்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் தெரியவந்தது. இது செயற்திட்டங்களின் கிரயம் மற்றும் நட்டத்தை அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்திருந்தது.

(ஈ) கம்பனியின் பொலன்னறுவை, COE - வடமேற்கு, தலைமை அலுவலகம் மற்றும் அநுராதபுரம் ஆகிய தள அலுவலகங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் மொத்தம் ரூபா 41.65 மில்லியன் தேறிய நட்டத்தில் இயங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்கிடை யில், அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை தள அலுவலகங்கள் முறையே மொத்தம் ரூபா 12.13 மில்லியன் மற்றும் ரூபா 12.64 மில்லியன் மொத்த நட்டத்தை 2021 திசெம்பர் 31 இல் ஈட்டியிருந்தன.

(உ) கம்பனியின் அம்பாறை, அநுராதபுரம், பொலன்னறுவ, பதுளை மற்றும் கொத்மலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள 05 தளங்களால் மீளாய்வாண்டில் 05 எஸ்.ஃ.பல்ட்.ஃ. குருஷர் (Asphalt/Crusher) ஆலைகளின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இருப்பினும், அம்பாறை (கிழக்கு) தளத்தின் ரூபா 20.08 மில்லியன் தொகையான ஒரு ஆலை மட்டுமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள 04 ஆலைகளின் பெறுமதி அதன் தாய்க் கம்பனியின் நிலையான சொத்துக்களில் உள்ளடக் கப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், ரூபா 83.95 மில்லியன் பெறுமதியான 03 ஆலைகள் மட்டுமே தாய் கம்பனியின் நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே, பதுளை தளத்திற்கு சொந்தமான ஒரு ஆலையின் பெறுமதி கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. அதேவேளை, பொலன்னறுவையில் உள்ள ஆலை மாத்திரமே மீளாய்வாண்டில் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததுடன் அறிக்கையிடல் காலத்தின் முடிவில் அந்த ஆலை ரூபா 60,753,937 மொத்த நட்டத்தைப் பதிவு செய்திருந்தது. மேற்கூறிய 05 ஆலைகளில் 04 எஸ்.ஃ.பல்ட்.ஃ. குருஷர் ஆலைகள் மீளாய்வாண்டு முழுவதும் பயன்படுத்தப்படாமல் செயலற்ற நிலையில் வைக்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1.431.24 மில்லியன் தொகை தாய்க் கம்பனியான மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்குச் (சீசீபீ) செலுத்தவேண்டிய மீதியொன்றாக கம்பனி காண்பித்திருந்ததுடன், இந்த மீதியானது தாய்க் கம்பனியிடமிருந்து அவ்வப்போது பெற்றுக் கொண்ட நிலையான சொத்துக்கள் மற்றும் பொருட்களிற்குரிய வாகன வாடகைக் கட்டணங்கள் மற்றும் தற்காலிக கடன்கள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. இந்த மீதியை அகற்றுவதற்கு பயனுள்ள நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாது இந்த மீதி தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றிருந்தமை மேலும் அவதானிக்கப்ப ட்டது. அத்துடன், கம்பனியின் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக ரூபா 10 மில்லியன் மூலதன பங்களிப்பு 2011 ஆம் ஆண்டில் தாய்க் கம்பனியிடமிருந்து கிடைத்திருந்தது. இருப்பினும், கம்பனி ஆர்பிக்கப்பட்டது முதல் இதுவரையிலும் இந்த முதலீடுகள் மீது எந்தவொரு பிரதிபலனும் கணிக்கப்பட்டு தாய்க் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் படி மொத்தக் கடன்பட்டோர் மீதி ரூபா 3,553.87 மில்லியன் ஆனதுடன் அதில் ரூபா 506.14 மில்லியன் மற்றும் ரூபா 10.85 மில்லியன் தொகைகள் முறையே 3 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாகக் காணப்பட்டன. மேலும் அந்தத் நிலுவைகளிலிருந்து இதுவரை அறவிடப்பட்ட விபரங்களை வழங்குவதற்கு கம்பனிக்கு முடிந்திருக்கவில்லை. அத்துடன், பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 220.39 மில்லியன் கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் நீண்டகாலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய பிடிகாசு ரூபா 3,062.45 மில்லியன் ஆகும். அதில் ரூபா 101.47 மில்லியன் மற்றும் ரூபா 132.71 மில்லியன் தொகைகள் பூரணப்படுத்திய செயற்திட்டங்கள் தொடர்பில் முறையே 3 முதல் 5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலமாகவும் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாகவும் அறவிப்படாதுள்ளதுடன், பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களால் உரிய அறவிடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது தொடர்ந்தும் நிலுவையாக காணப்படுகின்றது.

(ஐ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டிய பிடிகாசு என்பன முறையே ரூபா 1,913.82 மில்லியன் மற்றும் ரூபா 717.58 மில்லியன் தொகையாகக் காணப்பட்டன. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் படி, நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள மொத்தம் ரூபா 526.47 மில்லியன் கடன்கொடுத்தோர் மற்றும் ரூபா 308.88 மில்லியன் செலுத்த வேண்டிய பிடிகாசு என்பன 2 முதல் 5 ஆண்டுகளாக தீர்ப்பனவு செய்யப்படாது காணப்பட்டன.

(ஒ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 1,429.56 மில்லியன் கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதியினது சரியான தன்மையை இனங்காண்பதற்கும் அதற்கேற்ப வருடாந்த சொத்துகள் கணிப்பீட்டை மேற்கொள்வதற்கும் இயலுமான விதத்தில் கம்பனி அதன் நிலையான சொத்துக்களிற்கு சரியாக குறியீடு செய்திருக்காததுடன் அந்த குறியீடுகள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவுமில்லை.

அத்துடன், சொத்துக்களின் நகர்வைச் சரியாகக் கண்டறியும் வசதி நடைமுறையிலுள்ள ஈஆர்பி முறைமையில் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக, தள அலுவலகங்கள் அவற்றின் வேலைத் தளங்களின் கோரிக்கையின் பேரில் சொத்துக்களை நகர்த்துகையில், அதைக் கண்டறிய முடியாதிருப்பதுடன் சொத்து பயன்பாட்டிற்கான உள்ளக கிரயப் பட்டியலை உருவாக்க முடியாமலும் உள்ளது.

(ஓ) கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதிவியணிக் கோப்பிலுள்ள அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையினைக் காட்டிலும் 23 ஊழியர்களும் அங்கீகரிக்கப்பட்ட பதிவியணிக் கோப்பினை விஞ்சி மேலும் 26 ஊழியர்களும் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அத்துடன், தாய்க் கம்பனியினால் கம்பனிக்கு விடுவிக்கப்பட்டிருந்த ஊழியர்களின் எண்ணிக்கைக்கும் கம்பனியால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையில் காண்பிக்கப்பட்டுள்ள அவ்வாறு விடுவிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கைக்கும் இடையே 10 ஊழியர்களது வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இருப்பினும், இந்த வேறுபாட்டிற்காக கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட வில்லை.

**ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## முழுமையான வருமான கூற்று

| திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | குறிப்பு | CESL 2021 ரூ. | CESL 2020 ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | **5** | 8,298,388,145 | 6,694,097,650 |
| விற்பனை ஆகுசெலவு | **6** | (7,457,567,346) | (6,071,858,186) |
| **முழுமொத்த இலாபம்** | | **840,820,799** | **622,239,464** |
| ஏனைய வருமானம் | **7** | 34,927,013 | 71,240,454 |
| நிருவாக செலவுகள் | | (726,509,060) | (755,799,295) |
| விற்பனை மற்றும் பகிர்ந்தளிப்பு செலவுகள் | | (10,324,540) | (131,726) |
| **இயக்கச் செயற்பாடுகளிலிருந்து வரும் பெறுபேறுகள்** | | **138,914,212** | **(62,451,102)** |
| நிதி சார் வருமானம் | | 128,725,118 | 148,042,802 |
| நிதி சார் ஆகுசெலவு | | (12,717,367) | (15,192,456) |
| **தேறிய நிதி சார் வருமானம்** | **8** | **116,007,751** | **132,850,346** |
| **வருமான வரிக்கு முன்னருள்ள இலாபம்** | | **254,921,963** | **70,399,244** |
| வரி சார் செலவு | **9** | **(44,305,160)** | (11,252,105) |
| **குறித்த ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)** | | **210,616,804** | **59,147,138** |
| **ஏனைய முழுமையான வருமானம்** | | | |
| மோட்டார் வாகனங்களின் மீள்விலைமதிப்பு | | - | 194,550,564 |
| திட்டவட்டமான ஓய்வூதிய நன்மை திட்டங்கள் மீதான அட்டுறு இலாபம் / (நட்டம்) | **18.(d)** | (5,034,772) | (1,668,920) |
| **குறித்த ஆண்டிற்கான ஏனைய முழுமையான வருமானம்** | | **(5,034,772)** | **192,881,644** |
| **குறித்த ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானம்** | | **205,582,032** | **252,028,783** |

*அடைப்பு குறிகளுக்குள்ளிருக்கும் இலக்கங்கள் கழித்தல்களை குறிக்கும்.*

43 முதல் 74 வரையான பக்கங்களில் குறிப்பிப்பட்டுள்ள நிதி கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதி கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாகும்.

# நிதி நிலை கூற்று

**திசம்பர் 31 ஆம் திகதிற்கான**

| | குறிப்பு | CESL 2021 ரூ. | CESL 2020 ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் | 10 | 549,037,611 | 567,675,122 |
| உரித்துப் பாவனைச் சொத்துக்கள் | 11 | 14,147,577 | 14,661,752 |
| நிகழும் பணி - மூலதன சொத்துக்கள் | 12 | 28,101,690 | 27,826,616 |
| நீண்டகால முதலீடுகள் | 13 | - | - |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | 591,286,878 | 610,163,490 |
| **சொத்துக்கள்** | | | |
| பொருட்கள் | 14 | 1,027,024,303 | 723,214,220 |
| நிகழும் பணி | 15 | 35,198,733 | 105,091,340 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | 16 | 8,392,861,091 | 8,519,898,117 |
| குறுங்கால முதலீடுகள் | 13 | 2,336,348,436 | 2,291,209,712 |
| காசும் காசுக்கு சமனானவைகளும் | 17 | 651,195,770 | 308,434,117 |
| **மொத்த நடைமுறை சொத்துக்கள்** | | 12,442,628,333 | 11,947,847,506 |
| **மொத்த சொத்துக்கள்** | | 13,033,915,212 | 12,558,010,997 |
| **ஒப்பரவும் பொறுப்புக்களும்** | | | |
| பங்களித்த மூலதனம் | | 10,000,020 | 10,000,020 |
| மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கம் | | 194,550,564 | 194,550,564 |
| பிடித்துவைத்த சம்பாத்தியங்கள் | | 859,431,598 | 652,343,692 |
| | | 1,063,982,183 | 856,894,276 |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| ஒய்வூதிய நன்மைகள் கடப்பாடு | 18 | 29,209,476 | 19,175,983 |
| பிற்போடப்பட்டுள்ள வரி | 19 | 16,405,331 | 17,487,459 |
| சம்பந்தப்பட்டுள்ள கம்பனிகளுக்கு செலுத்த வேண்டிய தொகை | | 1,431,239,453 | 1,652,545,483 |
| **மொத்த நடைமுறையால்லாத பொறுப்புக்கள்** | | 1,476,854,261 | 1,689,208,925 |

| | | | |
|---|---|---|---|
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | **20** | **10,476,146,824** | **9,991,798,500** |
| செலுத்த வேண்டிய வருமான வரி | **21** | **16,931,945** | **20,109,297** |
| தள அலுவலகங்களுக்கு இடையிலான நடைமுறை கணக்குகள் | | **-** | **-** |
| வங்கி மேலதிக பற்று | **17** | **-** | **-** |
| **மொத்த நடைமுறை பொறுப்புக்கள்** | | **10,493,078,769** | **10,011,907,796** |
| **மொத்த ஒப்புரவுகளும் பொறுப்புக்களும்** | | **13,033,915,212** | **12,558,010,997** |

43 முதல் 74 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாகும்.

நிதிக் கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப் பட்டுள்ள என சான்றுபடுத்துகின்றோம்.

**திரு ஜே.எம்.பீ. ஜயவீர**
பிரதான நிதி அதிகாரி

**பொறியிய. எல்.டப்.ஜே.என். த அல்விஸ்**
பிரதான நிறைவேற்று அலுவலர்

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து வழங்குவது பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பாகும்.

எனவே பணிப்பாளர்கள் சபைக்காகவும் மற்றும் அதன் சார்பாகவும் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பம் இடப்படுகின்றன.

**பொறியிய. கே.டப். ஐவன் த சில்வா**
**தலைவர்**

**திரு டீ. மாபோபிட்டிய**
**பணிப்பாளர்**

2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி

## ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று

| | CESL | | | |
|---|---|---|---|---|
| | பங்களித்த மூலதனம் ரூ. | மூலதன ஒதுக்கம் ரூ. | மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கம் ரூ. | பிடித்துவைத்த சம்பாத்தியங்கள் ரூ. |
| **2020 சனவரி 1 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 10,000,020 | - | | 594,865,473 |
| குறித்த ஆண்டிற்கான சீராக்கல்கள் | | | | - |
| குறித்த ஆண்டிற்கான இலாபம் | - | - | | 59,147,138 |
| ஏனைய முழுமையான வருமானம் | - | - | 194,550,564 | (1,668,920) |
| | **10,000,020** | **-** | **194,550,564** | **652,343,691** |
| **2021 சனவரி 1 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 10,000,020 | - | 194,550,564 | 652,343,691 |
| குறித்த ஆண்டிற்கான சீராக்கல்கள் (குறிப்பு 01) | | | | 1,505,876 |
| குறித்த ஆண்டிற்கான இலாபம் | - | - | | 210,616,804 |
| ஏனைய முழுமையான வருமானம் | - | - | - | (5,034,772) |
| **2021 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | **10,000,020** | - | **194,550,564** | **859,431,598** |

*அடைப்புக்குள் இருக்கும் இலக்கங்கள் கழித்தல்களை சுட்டிக்காட்டுகின்றன.*

43 முதல் 74 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாகும்.

**குறிப்பு 01**

முன்னைய ஆண்டுகளில் வருமான வரி பொறுப்பு மாற்றங்கள் தக்க வருவாயுடன் சரிசெய்யப்பட்டன.

# காசுப் பாய்ச்சல் கூற்று

| திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | CESL | |
|---|---|---|
| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | |
| வரிக்கு முன்னருள்ள இலாபம் | **254,921,963** | 70,399,244 |
| ***பின்வருவனவற்றுக்கான சீராக்கல்கள்:*** | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் மீதான தேய்மானம் | 164,658,587 | 148,191,948 |
| தீராத மற்றும் சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கான ஏற்பாடுகள் | | |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | 1,505,876 | |
| சொத்துக்கள் | - | - |
| பணிக்கொடைக்காக பதிவழித்த ஏற்பாடுகள் | 12,122,613 | 7,418,761 |
| தீராத பற்றுக்கான ஏற்பாடுகள் | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் மீதான இலாபம் | 1,794,654 | 803,773 |
| குத்தகைக் காணியின் கழிவுப்பெறுமானம் | 514,175 | 514,174 |
| திட்டவட்டமான ஓய்வுதிய திட்டங்கள் மீதான உண்மையான இலாபம்/(நட்டம்) | (5,034,772) | (1,668,920) |
| தேறிய நிதி சார் வருமானம் | (116,007,751) | (132,850,346) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னருள்ள இயக்கச்செயற்பாட்டு இலாபம்** | **314,475,345** | **92,808,635** |
| பொருட்பதிவேடுகளிலுள்ள அதிகரிப்பு/(குறைவு) | (303,810,083) | 3,900,496 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு | 125,531,150 | 809,813,785 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகளிலுள்ள அதிகரிப்பு/(குறைவு) | 484,348,325 | (419,726,316) |
| சம்பந்தப்பட்ட கம்பனிகளுக்கு சேரவேண்டிய தொகைகளிலுள்ள அதிகரிப்பு/(குறைவு) | (221,306,030) | 52,348,808 |
| நிகழும் பணியிலுள்ள அதிகரிப்பு/(குறைவு) | 69,892,608 | (25,152,819) |
| பொது தொங்கு கணக்கிலுள்ள அதிகரிப்பு கடன் நிலுவை | - | - |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து ஈட்டிய காசு** | **469,131,314** | **513,992,589** |
| செலுத்திய வட்டி | (12,717,367) | (15,192,456) |
| செலுத்திய வரி | (47,058,763) | (25,162,019) |
| செலுத்திய பணிக்கொடை | (2,089,120) | (1,313,841) |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **407,266,064** | **472,324,272** |

## காசுப் பாய்ச்சல் கூற்று (தொடர்ச்சி)

| திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | CESL | |
|---|---|---|
| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் கொள்வனவு | (149,671,632) | (92,870,667) |
| குத்தகை ஆதன சொத்துக்கள் கொள்வனவு | - | - |
| நிகழும் பணியிலுள்ள மூலதன முதலீடு | (275,074) | - |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் விற்பனை வருமானம் | 1,855,901 | 917,700 |
| மானியங்கள் பெறுகை | - | - |
| குறுங்கால வைப்பிலுள்ள முதலீடுகள் | (45,138,724) | (531,228,122) |
| நீண்டகால முதலீட்டிலுள்ள முதலீடு | - | - |
| பங்குலாப வருமானம் | - | - |
| வட்டி வருமானம் | 128,725,118 | 148,042,802 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **(64,504,411)** | **(475,138,287)** |
| **நிதியீட்டும் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | |
| பங்குகள் விநியோக வருமானம் | - | - |
| செலுத்திய பங்குலாபங்கள் | - | - |
| கடன் மீள்கொடுப்பனவு | - | - |
| நிதி சார் குத்தகை பொறுப்புக்கள் கொடுப்பனவு | - | - |
| **நிதியீட்டும் செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப்  பாய்ச்சல்கள்** | **-** | **-** |
| காசும் மற்றும் காசு ஒப்புரவுகளிலுமுள்ள தேறிய அதிகரிப்பு/(குறைவு) | 342,761,653 | (2,814,015) |
| குறித்த ஆண்டு அரம்பத்திலுள்ள காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் | 308,434,116 | 311,248,129 |
| **குறித்த ஆண்டு இறுதியிலுள்ள காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும்** | **651,195,770** | **308,434,116** |

*அடைப்புக்குள் இருக்கும் இலக்கங்கள் கழித்தல்களை சுட்டிக்காட்டுகின்றன.*

43 முதல் 74 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாகும்.

# நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள்

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 1. கூட்டுத்தாபனத் தகவல்கள்

### 1.1. பொதுவான தகவல்கள்

இந்த சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் ('கம்பனி'), என்பது இலங்கையில் அமைந்திருக்கும் கூட்டிணைந்த வரையறுக்கப்பட்ட ஒரு தனியார் பொறுப்பு கம்பனியாகும். இந்த கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலங்கையில் இலக்கம் 415, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் (CESL) நிறுவனம் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2003 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் வரையறுக்கப்பட்ட ஒரு பொறுப்பு கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டது. அதன் பின்னர் இது 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீண்டும் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மீளப் பதிவு செய்யப்பட்டது. எனினும், இந்த நிறுவனம் 2011 ஆம் ஆண்டில்தான் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. இந்த நிறுவனம் அந்த ஆண்டிற்கு முன்னர் தனது செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கவில்லை.

### 1.2. பிரதான செயற்பாடுகளும் மற்றும் செயற்பாடுகளின் தன்மையும்

ஏதாவது வகையான பொறியியலுடன் அல்லது ஏதாவது பொறியியல் சம்பந்தமான செயற்பாடுகளுடன் இணைந்திருக்கும் நிர்மாண கருத் திட்டங்களை பொறுப்பேற்றல், நிறைவேற்றல், செயலாற்றுதல் ஆகிய வணிக சார் கருமங்களில் இந்த நிறுவனம் ஈடுபடுகின்றது.

### 1.3. தலைமை அலுவலம்

இலக்கம் 415, பௌத்தாலோக்க மாவத்தை,<br>
கொழும்பு 07.

### 1.4. கம்பனியின் செயலாளர்

திருமதி இ.எஸ்.பி. குணதுங்க<br>
இலக்கம் 415, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07.

### 1.5. வங்கிகளின் பட்டியல்

இலங்கை வங்கி<br>
மக்கள் வங்கி

### 1.6. குறிப்பிடத்தக்க பங்குகள்

ஆண்டின் இறுதியில் இந்த நிறுவனத்தின் தனிப் பங்குதாரர்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

| பங்குதாரர் | பங்குகளின் எண்ணிக்கை | பங்கொன்றுக்கான பெறுமானம் (ரூ.) | மொத்தப் பெறுமானம் (ரூ.) | பங்கு விகிதம் |
|---|---|---|---|---|
| மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகம் | 100,000 | 100 | 10,000,000 | 100% |
| | 2 | 10 | 20 | |

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் பற்றிய சுருக்கம்

இந்த நிதி கூற்றுக்களை தயாரித்த போது பிரயோகித்த அடிப்படையான கணக்கீட்டு கொள்கைகள் பற்றிய விபரங்கள் கீழே குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இந்த கொள்கைகள் வேறு ஏதாவது வழிகளில் எடுத்துரைக்க படாத வரையில் கணக்குகள் முன்வைக்கப்பட்டுள்ள சகல ஆண்டுகள் தொடர்பாகவும் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டு வந்துள்ளன.

### 2.1. கணக்குகள் தயாரித்தல் அடிப்படை

#### 2.1.1 இணக்கப்பாடு பற்றி கூற்று

இந்த நிறுவனத்தின் நிதி கூற்றுக்களில் நிதி நிலை கூற்று, இலாப அல்லது நட்ட கூற்று மற்றும் ஏனைய முழுமையான வருமான கூற்று, ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்று மேலும் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் (நிதி கூற்றுக்கள்) முதலிய விடய அம்சங்கள் உள்ளடங்குகின்றன. இந்த நிதி கூற்றுக்கள் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகம் (CA இலங்கை) விதித்திருக்கின்ற இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் (SLFRSs / LKASs) மற்றும் 2007 இன் 07 ஆம் இலங்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.2 நிதி கூற்றுக்களின் உள்ளடக்க கூறுகள்

நிதி கூற்றுக்களில் பின்வரும் உள்ளடக்க கூறுகள் அடங்குகின்றன:

(a) இலாப அல்லது நட்ட கூற்று மற்றும் ஏனைய முழுமையான வருமான கூற்று: குறித்த ஆண்டிற்கான இந்த நிறுவனத்தின் நிதி சார்ந்த செயலாற்றுகை பற்றிய தகவல்களை வழங்கல்.

(b) நிதி நிலை கூற்று: குறித்த ஆண்டு இறுதியிலுள்ள இந்த கம்பனியினதும் மற்றும் குழுவினதும் நிதி நிலை பற்றிய தகவல்களை வழங்கல்.

(c) ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று: குறித்த மீளாய்வு ஆண்டு காலப் பகுதியின் போது இந்த கம்பனி மற்றும் குழு ஆகியவற்றின் எடுத்துரைத்த மூலதனங்களினதும் மற்றும் நிதி ஒதுக்கங்களினதும் நகர்வுகள் பற்றிய தகவல்களை வழங்கல்.

(d) காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று: ஈட்டுகின்ற காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் மற்றும் அவற்றின் பயனும் பற்றிய தகவல்களை வழங்கல்.

(e) நிதி கூற்றுக்களுக்கான குறிப்புகள்: குறித்த கணக்கீட்டு கொள்கைகள் அதே போல் ஏனைய விளக்க குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்குதல்.

2021 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி கூற்றுக்கள் வெளியிடப்படும் முகமாக பணிப்பாளர்கள் சபையினால் 2022 ஆம் ஆண்டு மார் மாதம் 31 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு அதிகாரம் அளிக்கப்பட்டது.

#### 2.1.3 நிதி கூற்றுக்களுக்கான பொறுப்புக்கள்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினதும் மற்றும் இலங்கை கணக்கீட்டு நிமயங்களினதும் (SLFRSs / LKASs) ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் நிதி கூற்றுக்களை தயாரித்து அவற்றை வழங்குவது பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பாகும்.

#### 2.1.4 நிதி ஆண்டு காலம்

இந்த நிறுவனத்தின் நிதி ஆண்டு காலம் 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் 2021 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியை உள்ளடக்குகின்றது.

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.1.5 தொழிற்படு மற்றும் சமர்ப்பண நாணயம்

இந்த நிறுவனத்தின் நிதி கூற்றுக்களில் உள்ளடங்கும் விடயங்கள் இந்த நிறுவனம் இயங்குகின்ற ஆரம்ப பொருளாதார சூழ்நிலையில் காணப்படுகின்ற நாணயத்தை பிரயோகித்து அளவிடப் பட்டுள்ளன. இந்த நிறுவனத்தினது நிதி கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் (ரூ.) எடுத்துரைக்கப் பட்டுள்ளன. இந்த இலங்கை ரூபா இந்த கம்பனியின் தொழிற்படு நாணயமாகும்.

### 2.1.6 அளவீட்டு அடிப்படை

இந்த நிதி கூற்றுக்கள் நிதி நிலை கூற்றில் காணப்படும் பின்வரும் பொருண்மையான விடயங்கள் தவிர வரலாற்று ஆகுசெலவு பேரில் தயாரிக்கப்பட்டுள்ளன.

a) நிதி சார் சொத்துக்களும் மற்றும் நிதி சார் பொறுப்புக்களும், LKAS 39 ஆம் இலக்க கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நியாய விலை பெறுமானத்தில் அளவிடப்பட்டுள்ளன.

b) ஓய்வூதிய ஊழிர் நன்மைகள் பொறுப்பு, LKAS 19 இலக்க கணக்கீட்டு நியமத்தின் அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

c) பொருட்பதிவேடுகள் LKAS 2 ஆம் இலக்க கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அவற்றின் தற்போதைய பெருமானத்தில் எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

### 2.1.7 ஒத்தீட்டு தகவல்கள்

கணிய, வரலாற்று மற்றும் விவர தகவல்கள் அடங்கலாக ஒத்தீட்டு தகவல்கள் பொருத்தமானவாறு முன்னைய காலப் பகுதி தொடர்பாக நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முன்னைய ஆண்டின் நிதி கூற்றுக்களை சமர்ப்பித்தல் மற்றும் வகைப்படுத்தல் ஆகியன சிறந்த சமர்ப்பனத்திற்காகவும் மற்றும் நடைமுறை ஆண்டிலுள்ள அத்தகையவற்றுடன் ஒப்பிடக் கூடியளவில் இருத்தல் வேண்டும் என்பதற்காகவும் பொறுத்தமானவாறு திருத்தப்பட்டுள்ளன.

### 2.1.8 அண்ணளவான ரூபாவில் எடுத்துரைத்தல்

இலங்கை ரூபாவில் வழங்கப்பட்டுள்ள சகல நிதி சார் தகவல்களும் தேவையான போது வேறு விதத்தில் சுட்டிக் காட்டப்படாத வரையில் அண்ணளவான ரூபாவில் (ரூ.) எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 2.1.9 சமப்படுத்தல்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அல்லது வருமானம் மற்றும் செலவுகள் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களின் மூலமாக அனுமதிக்க அல்லது தேவைப்படுத்தப்படாத வரையில் சமப்படுத்தப் படுவதில்லை.

### 2.1.10 பெருள்தன்மையும் மற்றும் சேர்வும்

ஒரேமாதிரியான பொருட்களின் ஒவ்வொரு பொருள் வகுதியும் நிதி கூற்றுக்களில் தனித் தனியாக எடுத்துரைக்கப்படுகின்றது. மேலும் ஒரே மாதிரியான தன்மையில் அல்லாத அல்லது ஒரே மாதிரியான தொழிற்பாடற்ற பொருட்கள் அவை முக்கியமில்லை என்றாலொழிய தனித் தனியாக எடுத்துரைக்கப்படுகின்றன.

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.1.11 முக்கியமான கணக்கீட்டு தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோல்கள்

கம்பனியின் நிதி கூற்றுக்களை தயாரித்தல் அறிக்கையிடப்படும் வருமான தொகைகள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் அவற்றுடன் இணைந்து வரும் வெளிப்படுத்தல்கள் மற்றும் இடைநேர் பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்கள் என்பவற்றின் மீது விளைவுகளை கொண்டுள்ள தீர்ப்புகளையும், மதிப்பீடுகளையும் எடுகோல்களையும் மேற்கொள்ள கம்பனியின் முகாமைத்துவத்தை தேவைப்படுத்தும். இந்த எடுகோல்கள் மற்றும் மதிப்பீடுகள் ஆகியன பற்றிய நிச்சயமற்ற தன்மை எதிர்காலங்களில் பாதிக்கப்படக் கூடிய சொத்துக்களின் அல்லது பொறுப்புக்களின் முன்கொணரப்படுகின்ற பொருண்மையான ஒரு சீராக்கலை தேவைப்படுத்த விளைவாக அமையக் கூடும்.

அடுத்த நிதி ஆண்டினுள் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கொணரப்படும் தொகைகளுக்கு பொருண்மையான ஒரு சீராக்கலை ஏற்படுத்துகின்ற முக்கியமான ஆபத்து நிலையை கொண்டிருக்கும் அறிக்கையிடப்படுகின்ற திகதியிலுள்ள நிச்சயமற்ற மதிப்பீட்டின் எதிர்கால மற்றும் முக்கிய மூலங்களுடன் சம்பந்தப்படுகின்ற முக்கிய எடுகோல்களும் கீழ்காணும் விடயங்களின் கீழ் தொடர்புடைய நிதி கூற்றின் தனித் தனியான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த கம்பனி தனது நிதி கூற்றுக்களை தயாரித்த வேளையில் கிடைக்க கூடியதாகவிருந்த வழியலகுகள் பற்றிய எடுகோல்களையும் மற்றும் மதிப்பீடுகளையும் அடிப்படையாக கொண்டுள்ளது. மேலும், எதிர்கால அபிவிருத்திகள் தொடர்பாக ஏற்கெனவேயுள்ள சந்தர்ப்ப சூழ்நிலைகளும் மற்றும் எடுகோல்களும் எவ்வாறாயினும் கம்பயினது கட்டுப்பாட்டிற்கு அப்பால் எழுகின்ற சந்தை மாற்றங்களின் அல்லது சந்தரப்ப சூழ்நிலைகளின் காரணமாக மாறலாம். அது மாதிரியான மாற்றங்கள் அவை எழுகின்ற போது எடுகோல்களின் அடிப்படையில் பிரதிபலிக்கப்படுகின்றன.

இந்த நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட வேளையில் பிரயோகிக்கப் பட்டுள்ள பின்வரும் முக்கியமான தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோல்கள் முதலியவற்றை, முகாமை கருத்திற் கொண்டுள்ளது.

**தொழிற்படும் சாத்தியம்**

தொடர்ச்சியாக இயங்க கூடிய தனது ஆற்றல் சாத்தியத்தை இந்த கம்பனியின் முகாமைத்துவம் மதிப்பீடு செய்துள்ளது. அதன் பயனாக, இந்த கம்பனி எதிர்காலத்தில் எதிர்வு கூறக் கூடிய தனது வணிக செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்ல தன்னிடம் போதிய வளங்கள் இருப்பதாக திருப்தி அடைகின்றது. மேலும், இந்த கம்பனியின் முகாமைத்துவம் தனது செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்து செல்வதற்கான ஆற்றல் மீது கணிசமான சந்தேகத்தை தோற்றுவிக்கலாம் எனும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுடன் சம்பந்தமான பொருண்மையான நிச்சயமற்ற விடயங்கள் எதையும் அறியாதுள்ளது. ஆகையால், நிதி கூற்றுக்களை, கம்பனி தொடர்ந்து இயங்க கூடிய சாத்தியத்தின் அடிப்படையில் தொடர்ச்சியாக தயாரிக்க வேண்டி இருக்கின்றது.

கம்பனியின் நிதி கூற்றுக்களுக்கு பொருண்மையான ஒரு சீராக்கலை மேற்கொள்வதற்கு பயனாக அமைகின்ற முக்கியமான ஆபத்தினதும் மற்றும் இனங்காணப்பட்டுள்ள தொகையினதும் மீது விளைவுகளை கொண்டிருக்கின்ற தீர்மானங்கள், எடுகோல்கள் மற்றும் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை என்பன தொடர்பான தகவல்கள் பின்வருகின்ற குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

a) திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் கடப்பாட்டு அளவீடு: முக்கியமான அளவீட்டு எடுகோல்கள்

b) நிதி உபகரணங்களின் நியாய விலை பெறுமான மதிப்பீடு

c) நிதி சார் சொத்துக்களின் நட்டம்: முக்கியமாக மீளறவிடக் கூடிய தொகை பற்றிய முக்கிய எடுகோல்

d) வருமான வரி (நடைமுறை வரி மற்றும் பிற்போடப்பட்டுள்ள வரி)

e) நிதியேற்பாடுகளையும் மற்றும் இடைநேர் பொறுப்புக்களையும் இனங்கண்டு அளவிடுதல்: வளங்களின் வெளிப் பாய்ச்சல் அளவும் மற்றும் நிகழ்தகவும் பற்றிய முக்கியமான எடுகோல்

f) சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் என்பவற்றின் (PPE) பயனுள்ள பாவனை காலத்தை மதிப்பிடுதல்

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.1.12 நடைமுறை வகைப்படுத்தல் எதிர் நடைமுறை சாரா வகைப்படுத்தல்

இந்த நிறுவனம் தனது சொத்துக்களையும் பொறுப்புக்களையும் நிதி நிலை கூற்றில் நடைமுறை வகைப்படுத்தல் / நடைமுறையல்லாத வகைப்படுத்தல் அடிப்படையில் எடுத்துரைக்கின்றது.

ஒரு சொத்து, அது:

a) வழமையான இயக்கச் செயற்பாட்டு வட்டத்தினுள் மாற்றுவதற்கு அல்லது விற்பனை செய்ய எண்ணுவதற்கு அல்லது நுகர்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற;

b) பிரதானமாக வர்த்தக நோக்கத்திற்காக ஒதுக்கி வைக்கின்ற;

c) அறிக்கையிடப்படும் காலத்தின் பின்னர் பன்னிரெண்டு மாத கால பகுதிற்குள் மாற்ற எதிர்பார்க்கப்படும்; அல்லது

d) அறிக்கையிடப்படுகின்ற திகதியின் பின்னர் ஆகக் குறைந்தது பன்னிரெண்டு மாத காலத்திற்கான ஒரு பொறுப்பை தீர்ப்பனவு செய்யும் பொருட்டு பயன்படுத்துவதிலிருந்து அல்லது பரிமாற்றிக் கொள்வதிலிருந்து காசு அல்லது காசு ஒப்புரவு மட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்படாத போது ஒரு நடைமுறை சொத்தாக வகைப்படுத்தப்படுகின்றது.

கம்பனி, இவை தவிர ஏனைய சகல சொத்துக்களையும் நடைமுறை அல்லாத சொத்துக்களாக வகைப் படுத்துகின்றது.

ஒரு பொறுப்பு, அது:

a) வழமையான இயக்கச் செயற்பாட்டு வட்டத்தில் தீர்ப்பனவு செய்ய எதிர்பார்க்கப்படும்;

b) பிரதானமாக வர்த்தக நோக்கத்திற்காக ஒதுக்கி வைக்கின்ற;

c) அறிக்கையிடப்படும் காலத்தின் பின்னர் பன்னிரெண்டு மாத கால பகுதிற்குள் தீர்ப்பனவு செய்யப்படவுள்ள; அல்லது

d) அறிக்கையிடப்படுகின்ற திகதியின் பின்னர் ஆகக் குறைந்தது பன்னிரெண்டு மாத காலத்திற்கான பொறுப்பை தீர்ப்பனவு செய்யும் விடயத்தை பிற்போடுவதற்கு நிபந்தனையற்ற உரிமை இல்லாதிருக்கும் போது நடைமுறை பொறுப்பாக வகைப்படுத்தப்படுகின்றது.

கம்பனி இவை தவிர ஏனைய சகல பொறுப்புக்களையும் நடைமுறை அல்லாத பொறுப்புக்களாக வகைப்படுத்துகின்றது. பிற்போடப்பட்ட வரி சார் பொறுப்புக்கள் நடைமுறையல்லாத பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

### 2.1.13 கடன்வாங்கு ஆகுசெலவுகள்

எதிர்பார்த்த பாவனையின் அல்லது விற்பனையின் நிமித்தம் ஒரு சொத்து ஆயத்தப் படுத்தப்படுவதற்கு கணிசமான ஒரு காலத்தை கட்டாயமாக எடுக்கும் அத்தகைய ஒரு சொத்தின் கொள்வனவுக்கு, நிர்மாணத்திற்கு அல்லது உற்பத்திற்கு நேரடியாக சேரக் கூடிய கடன் வாங்கு ஆகுசெலவுகள் அத்தகைய சொத்தின் ஆகுசெலவின் ஒரு பாகமாக மூலதனப்படுத்தப் படுகின்றன. ஏனைய சகல கடன்வாங்கு ஆகுசெலவுகளும் EIR முறையியலை பிரயோகித்து அவை எழுகின்ற காலப் பகுதியில் செலவுகளாக கணிக்கப்படுகின்றன.

ஒரு நிறுவனம் நிதிகளை கடனாக வாங்குகின்றமை தொடர்பாக எழுகின்ற வட்டி மற்றும் ஏனைய ஆகுசெலவுகள் என்பன இந்த கடன்வாங்கு ஆகுசெலவுகளில் உள்ளடங்குகின்றன.

### 2.1.14 காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்று

LKAS - 7 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க 'காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்றின்' பேரில் 'மறைமுக முறையியலை' பிரயோகித்து, காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்று தயாரிக்கப் பட்டுள்ளது.

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.1.14 காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்று (தொடர்ச்சி)

அறிந்த காசு தொகைக்கும் மற்றும் பெறுமானத்தில் கணிசமான ஒரு ஆபத்து மாற்றத்திற்கும் அமைய உடனடியாக மாற்றக் கூடிய குறுங்கால முதலீடுகள், வங்கியிலுள்ள காசு, மற்றும் கையிலுள்ள காசு என்பன, காசும் மற்றும் காசு ஒப்புரவுகளிலும் உள்ளடங்குகின்றன.

கிடைத்த வட்டியும் மற்றும் கிடைத்த பங்குலாபங்களும் முதலீட்டு காசுப் பாய்ச்சல்களாக வகைப்படுத்தப்படுகின்றன. இதே வேளை, செலுத்தப்படுகின்ற பங்குலாபம் நிதியீட்டும் காசுப் பாய்ச்சலாக வகைப்படுத்தப்படுகின்றது. மேலும், செலுத்தப்படும் வட்டி, காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்றை தயாரிக்கும் நோக்கத்திற்காக இயக்கச் செயற்பாட்டு காசுப் பாய்ச்சலின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றது.

கம்பனியினது காசு முகாமைத்துவத்தின் இன்றியமையாத ஒரு பாகமாக உருவாகுகின்ற மற்றும் கோரலின் பேரில் மீளச்செலுத்த வேண்டிய வங்கி மேலதிக பற்றுக்களும் அதே போல் குறுங்கால முதலீட்டு கடன்களும் காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் அடங்கிய ஒரு ஆக்கக்கூறாக உள்ளடக்கப்படுகின்றன.

### 2.2. வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்கள்

**கொடுக்கல்வாங்கல்களும் மற்றும் நிலுவைகளும்**

சகல வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்களும் தொழிற்படு நாணயத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. உரிய தொழிற்படு நாணயத்தை கம்பனி நிர்ணயிக்கின்றது. இந்த கம்பனியினது நிதி கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் அந்த தொழிற்பாடு நாணயத்தை பிரயோகித்து அளவிடப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்கள் இனங்காணப்படும் பொருட்டு அந்த கொடுக்கல்வாங்கல் முதலாது தகுதி பெறும் நாளில் உள்ள அவற்றின் அந்தந்த தொழிற்படு நாணய அதேவிடத்து விகித அடிப்படையில் கம்பனியினால் முதலில் பதியப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயத்தில் பெறுமானம் காணப்பட்டுள்ள நிதி சார் சொத்துக்களும் மற்றும் பொறுப்புக்களும் அறிக்கையிடப்படுகின்ற திகதியில் உள்ள அதேவிடத்து விகிதத்திலுள்ள சமனான தொழிற்படு நாணயத்திற்கு மீள பரிவர்த்தனை செய்யப்படுகின்றன.

நிதி சாரா சொத்துக்கள் ஒரு வெளிநாட்டு நாணய ஆகுசெலவில், வரலாற்று ஆகுசெலவுகள் அடிப்படையில் அளவிடப்பட்டு அவற்றின் ஆரம்ப கொடுக்கல்வாங்கல்கள் திகதியில் உள்ள நாணயமாற்று விகிதங்களை பிரயோகித்து மீளபரிவர்த்தனை செய்யப்படுகின்றன. நிதி சாரா சொத்துக்களும் மற்றும் நிதி சாரா பொறுப்புக்களும் அவற்றின் பெறுமானங்கள் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் இருந்த நாணயமாற்று வீதங்களை பிரயோகித்து மீளபரிவர்த்தனை செய்யப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயமாற்று வித்தியாசங்கள் பொதுவாக இலாப அல்லது நட்ட கூற்றில் இனங்காணப் படுகின்றன.

### 2.3. சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

கம்பனி சேவைகளை வழங்குவதில் தான் ஈடுபடுத்தும் அல்லது பயன் படுத்தும் அல்லது ஒரு வருடத்திற்கு அதிக காலமாக நிருவாக சார் நோக்கத்தின் நிமித்தம் பயன்படுத்த எதிர்பார்க்கும் தனது சொந்த சொத்துக்களை கணக்கீடு செய்வதில் 'சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்' என்பன பற்றி LKAS 16 ஆம் இலக்க கணக்கீட்டு நியமத்தை பிரயோகிக்கின்றது.

### 2.3.1 இனங்காணலும் மற்றும் அளவீடும்

எதிர்கால பொருளாதார நன்மைகள் அநேகமாக கம்பனிக்கு வருவதாக இருந்தால் சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என இனங்காணப்படுகின்றன. அந்த சொத்துக்களின் ஆகுசெலவு நம்பத்தகுந்ததாக அளவிடக் கூடியதாகவும் இருக்கும்.

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கா

### 2.3.1 இனங்காணலும் மற்றும் அளவீடும் (தொடர்ச்சி)

எல்லா சொத்துக்களும், பொறித்தொகுதிகளும் மற்றும் உபகரணங்களும் முதலில் ஆகுசெலவில் பதியப்படுகின்றன. கம்பனி சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பவற்றுக்கு ஆகுசெலவு முறையியலை பிரயோகித்து அவற்றின் மீது குறைந்த திரண்ட தேய்மானம் மீதான ஏதாவது இடைநேர் செலவுகளும் மற்றும் ஏதாவது திரண்ட பாதிப்புக்கள் நட்டங்கள் அடங்கலாக அத்தகையவற்றின் கொள்வனவு அல்லது நிர்மாண ஆகுசெலவில் பதிகின்றது. கொணரப்படும் பெறுமானம் மீளறவிடமுடியாதுள்ளது என்பதை சுட்டிக்காட்டும் சந்தர்ப்பங்களில் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் காணப்படுகின்ற போது நட்டத்தின் நிமித்தம் சொத்துக்களினதும், பொறித் தொகுதிகளினதும் மற்றும் உபகரணங்களினதும் கொணரப்படுகின்ற பெறுமானங்கள் மீளாய்வு செய்யப்படும்.

மீள்விலைமதிப்பீட்டின் காரணமாக ஒரு சொத்தின் கொணரப்படும் தொகை அதிகரிக்கப்படும் போது, அத்தகைய அதிகரிப்பு ஏனைய முழுமையான வருமானத்தில் மீள்விலைமதிப்பீட்டு மிகை என்ற தலைப்பின் கீழ் ஒப்புரவில் திரண்டதாக இனங்காணப்படுதல் வேண்டும். எனினும், அந்த அதிகரிப்பு இலாபத்தில் அல்லது நட்டத்தில் முன்கூட்டி இனங்காணப்பட்டுள்ள அதே சொத்தின் மீள்விலைமதிப்பீட்டு குறைவை ஒதுக்கிவைக்கும் அளவுக்கு இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுதல் வேண்டும். ஏனைய விரிவான வருமானத்தில் இனங்காணப்படும் குறைவு மீள்விலை மதிப்பீட்டு மிகைகள் தலைப்பின் கீழ் ஒப்புரவில் உள்ள திரண்ட தொகையை குறைக்கும்.

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்ற ஒரு விடயம் தொடர்பான ஒப்புரவில் உள்ளடங்கும் மீள்விலைமதிப்பீட்டு மிகை அத்தகைய சொத்துக்கள் இனங்காணாது விடப்படும் போது, பிடித்துவைத்த சம்பாத்தியத்திற்கு நேரடியாக மாற்றப்படலாம்.

### 2.3.2 முழுவுரிமை சொத்துக்கள்

ஒரு சொத்தின், பொறித் தொகுதியின், உபகரணத்தின் ஆகுசெலவு அதன் கொள்வனவு விலை மற்றும் அதன் எதிர்பார்த்த பாவனையின் நிமித்தம் அதனை தொழிற்படும் நிலைக்கு கொண்டுவருவதற்கு அந்த சொத்துக்கு ஏற்பட்டுள்ள நேரடியான ஏதாவது ஆகுசெலவு முதலிய செலவுகளை உள்ளடக்கியிருக்கும். சுயமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் ஆகுசெலவு அந்த சொத்துக்களின் எதிர்பார்த்த பயன் நிமித்தம் அவற்றை தொழிற்படும் நிலைக்கு கொண்டு வருவதில் ஏற்பட்டுள்ள வேறு ஏதாவது நேரடி ஆகுசெலவுகள், நேரடி தொழிலாளர் செலவுகள் மற்றும் மூலப்பொருட்களின் ஆகுசெலவுகள் என்பவற்றை உள்ளடக்கியிருக்கும். பொருட்களை அகற்றுதல், கழற்றுதல் ஆகிய செயற்பாடுகளுடன் சம்பந்தப்படும் செலவுகள் மற்றும் அவற்றை ஸ்தலத்தில் நிறுவுவதற்கு ஏற்படும் செலவுகள் அந்த சொத்துக்களை தகுதி பெற செய்வதில் பெற்றுக் கொள்ளப்படும் கடன் ஆகுசெலவுகள் முதலிய செலவுகளும் இதில் உள்ளடங்கும்.

ஒரு சொத்தின், ஒரு பொறித் தொகுதியின், ஒரு உபகரணத்தின் பாகங்கள் வித்தியாசமான பாவனை காலங்களை கொண்டிருக்கின்ற போது அத்தகைய பாகங்கள் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்ற தலைப்பில் தனித் தனியான விடயங்கள் (பிரதான ஆக்கக்கூறு) கீழ் கணக்கீடு செய்யப்படுகின்றன.

வாடிக்கையாளர் தரப்புகளிமிருந்து மாற்றப்படுகின்ற சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் என்பன முதலில் அவற்றின் கட்டுப்பாடு பெறப்படும் திகதியிலுள்ள அவற்றின் நியாய விலை பெறுமானத்தில் அளவிடப்படுகின்றன. சம்பந்தப்படும் உபகரணத்தின் தொழறிப்பாட்டிற்கு கொள்வனவு செய்யப்படும் ஏதாவது முக்கியமான இன்றியமையாத ஒரு மென்பாகம் அந்த உபகரணத்தின் ஒரு பாகமாக மூலதனப்படுத்தப் படுகின்றது.

### 2.3.3 குத்தகை சொத்துக்கள்

கம்பனி, கணிசமான அளவுகளில் பொறுப்புக்களையும் மற்றும் உரித்துக்களையும் பெறும் அடிப்படையில் கம்பனிக்கு கிடைக்கும் குத்தகை சொத்துக்கள் அனைத்தும் நிதி சார் குத்தகை சொத்துக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.3.3 குத்தகை சொத்துக்கள் (தொடர்ச்சி)

குத்தகை சொத்துக்கள், ஆரம்ப இனங்காணலின் பேரில் அளவிடப்பட்டு அவற்றின் குறைந்த நியாய விலை பெறுமானத்திற்கும் மற்றும் தற்பொழுது செலுத்தப்படுகின்ற ஆகக்குறைந்த குத்தகைகளின் கொடுப்பனவுகள் பெறுமானத்திற்கும் சமனான ஒரு தொகையில் மூலதனமாக்கப்படுகின்றன. அத்தகைய ஆரம்ப இனங்காணலை அடுத்து, அத்தகைய சொத்துக்கள் அவற்றுக்கு ஏற்புடைய கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க கணக்கீடு செய்யப்படுகின்றன.

நில பாவனை உரிமையை பெறுவதற்காக முன்கூட்டி செலுத்தப்படும் குத்தகை வாடகைகள் நன்மைகள், பெறப்படும் விதத்திற்கு இணங்க குத்தகை நிபந்தனை அடிப்படையில் கழிக்கப்படுகின்றன. நட்டம் ஏதும் இருப்பின், அத்தகைய நட்டம் இலாப அல்லது நட்ட கூற்றில் இனங்காணப்படுகின்றது.

### 2.3.4 தொடர்ந்து வரும் ஆகுசெலவுகள்

ஒரு சொத்தின், ஒரு பொறித் தொகுதியின், ஒரு உபகரணத்தின் பாகத்தை மீளிடுவதற்காக ஏற்படும் செலவு, அநேகமாக எதிர்கால பொருளாதார நன்மைகள் நிலைத்திருப்பதை பொறுத்து அந்த சொத்தின் கொணரப்படும் தொகையில் இனங்காணப்படுகின்றது. பாகத்தினுள் வரும் செலவு கம்பனிக்கு செல்லுமாயின் மற்றும் அதன் ஆகுசெலவு நம்பத்தகுந்தளவில் அளவிடக் கூடியதாக இருக்குமாயின், அத்தகைய செலவு அவ்வாறு இனங்காணப்படுகின்றது. மீளிடப்படும் பாகத்தின் கொணரப்படும் தொகையும் இனங்காணப்படுகின்றது. சொத்துக்களின், பொறித் தொகுதிகளின், உபகரணங்களின் நாளாந்த இயக்கச் செயற்பாட்டிற்கு செலவாகும் செலவுகள், அந்த செலவுகள் ஏற்பட்ட விதத்திலேயே இலாப கணக்கில் அல்லது நட்ட கணக்கில் இனங்காணப் படுகின்றன.

### 2.3.5 இனங்காணாது விடுதல்

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன அவற்றின் அகற்றலின் போது அல்லது அவற்றிலிருந்து எதிர்பார்ந்த எதிர்கால பொருளாதார நன்மைகள் கிடைக்காத போது அவை இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றன. அத்தகைய சொத்துக்களை இனங்காணாது விடுவதிலிலுந்து ஏழுகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டம் (அகற்றல் மீதான தேறிய வருமானத்திற்கும் சொத்துக்களின் கொணரப்படும் தொகைக்கும் இடையில் கணிப்பிடப்பட்டவாறான வித்தியாசம்) அத்தகைய சொத்துக்கள் இனங்காணாது விடப்படும் ஆண்டில் முழுமையான வருமான கூற்றில் இனங்காணப்படுகின்றன.

### 2.3.6 தேய்மானம்

சொத்துக்கள் மற்றும் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் ஒவ்வொரு பாகத்தினதும் மதிப்பிடப்படும் பாவனை காலத்தின் பேரில் நேர்நிரல் அடிப்படையில் அவற்றின் தேய்மானம் இலாப அல்லது நட்ட கணக்கில் இனங்காணப்படுகின்றது. குத்தகை சார்ந்த சொத்துக்கள் குறித்த குத்தகை கால முடிவில் கம்பனி அந்த குத்தகை சொத்துக்களின் உரித்தை நியாயமாக நிச்சயமாக பெறும் என்றிருந்தாலொழிய அவற்றின் பாவனை காலம் மற்றும் அவற்றின் குறுங்கால குத்தகை காலம் ஆகியவற்றின் அடிப்படையில் அவற்றின் தேய்மானம் கணிப்பிடப்படுகின்றது. ஒரு சொத்து பாவனைக்காக கிடைக்க தொடங்குகின்ற போதும் மற்றும் அந்த சொத்து விற்பனை நிமித்தம் ஒதுக்கப்பட்டு வகைப்படுத்தப்படுகின்ற (அல்லது கம்பனி விற்பனைக்காக வகைப்படுத்தி அகற்றல் விடயத்தில் உள்ளடக்கும்) திகதிற்கு முன்னர் ஒரு சொத்தின் தேய்மானம் முடிவுறுகின்ற போதும் மற்றும் அந்த சொத்து இனங்காணாது விடப்படுகின்ற திகதியின் போதும் அந்த சொத்துக்கான தேய்மான ஏற்பாடு மேற்கொள்ளப் படுகின்றது.

முழு உரிமை நிலத்திற்கும் மற்றும் நிகழுகின்ற மூலதன பணிக்கும் தேய்மானம் கணிக்கப் படுவதில்லை. சொத்துக்களினது மதிப்பிடப்பட்டுள்ள பாவனை காலம் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு:

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.3.6 தேய்மானம் (தொடர்ச்சி)

| சொத்துக்கள் வகுதி | பயனுள்ள பாவனை காலம் (ஆண்டுகள்) |
|---|---|
| கட்டிடங்கள் | 13 1/3 ஆண்டுகள் |
| பொறித் தொகுதிகள், இயந்திராதிகள் | 5 ஆண்டுகள் |
| கணனிகள் நலன்புரி, தொடர்பாடல் சாதனங்கள் | 5 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | 8 ஆண்டுகள் |
| கருவிசாதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 5 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 4 ஆண்டுகள் |
| கொள்கலன்கள் | 5 ஆண்டுகள் |
| வாசிகசாலை நூல்கள் | 8 ஆண்டுகள் |

கம்பனி வணிக திட்டங்கள், திறமுறைத் திட்டங்கள், சொத்துக்களின் எதிர்பார்த்த பாவனை கால அளவு மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் என்பன போன்ற காரணிகள் அடிப்படையில் வருடாந்தம் மதிப்பிடப் படும் PPE இன் பயனுள்ள பாவனை காலத்தை மீளாய்வு செய்கின்றது. இந்த மதிப்பீடுகளில் காணப்படும் மாற்றங்களினால் கணிசமான அளவு தாக்கம் ஏற்படக் கூடிய செயற்பாடுகளின் எதிர்கால பலன்கள் குறித்த காரணிகளின் மாற்றங்களினால் கிடைத்துள்ளன. PPE இன் மதிப்பிடப்படும் பயனுள்ள பாவனை காலத்தில் காணப்படும் குறைவு பதியப்பட்டுள்ள தேய்மான கணிப்பீட்டை அதிகரித்து அந்த PPE இன் நிலுவைகளை குறைக்கும்.

சொத்துக்களின் கழிவு பெறுமானங்களும் மற்றும் தேய்மான கணிப்பு முறையியலும் ஒரு சொத்தின் பயனுள்ள பாவனை காலம் அல்லது கழிவு பெறுமானம் மாறியுள்ளது என சுட்டிகள் தென்படுகின்ற போது மீளாய்வு செய்யப்படுகின்றன. தற்போதைய எதிர்பார்ப்புகளில் ஒரு கணிசமான அளவு மாற்றம் இருந்துள்ளதாயின், சொத்தின் கழிவு பெறுமானம், தேய்மான கணிப்பீட்டு முறையியல் அல்லது பயனுள்ள பாவனை காலம் என்பன அத்தகைய மாற்றங்களை பரதிபலிக்கின்ற வகையில் மாற்றப்படுகின்றன.

### 2.3.7. நிகழும் மூலதன பணிகள் - PPE

அறிக்கையிடப்படும் திகதியிலுள்ள நிறைவு செய்யப்படாத குறித்த ஆண்டு காலப் பகுதியில் ஏற்பட்டுள்ள மூலதன செலவுகள் நிகழும் மூலதன பணிகளாக கணக்கு காட்டப்படுகின்றன. இதே வேளையில், குறித்த ஆண்டு காலப் பகுதியில் நிறைவு செய்யப்பட்டுள்ளதும் மற்றும் பாவனைக்கு கிடைக்க செய்யப்பட்டுள்ளதுமான மூலதனம் சார்ந்த சொத்துக்கள், சொத்துக்களும், பொறித் தொகுதிகளும் என மாற்றப்பட்டுள்ளன.

### 2.3.8. நிகழும் பணி - கணனி மென்பாகங்கள் (கட்புலனாகாத சொத்துக்கள்)

சொத்துக்களுடன் இணைந்த எதிர்கால பொருளாதார நன்மைகள் அநேகமாக கம்பனிக்கு வருவதாகவும் மற்றும் அந்த சொத்துக்களின் ஆகுசெலவு நம்பத்தகுந்ததாக அளவிடக் கூடியதாகவும் இருக்கும் பட்சத்தில், ஒரு கட்புலனாகாத சொத்து இனங்காணப்படுகின்றது. ERP மென்பாகம் அபிவிருத்தி செய்யப்படு வருகின்றது. ERP முறைமையின் அபிவிருத்தி ஆகுசெலவை தெளிவாக இனங்கண்டு, நம்பத்தகுந்த அளவில் அளவிடுவதற்கு முடியும். அநேகமாக எதிர்காலத்தில் மேலும் பொருளாதார நன்மைகளுக்கு வழிவகுக்கும் அம்சங்கள், நிகழுகின்ற கட்புலனாகாத சொத்துக்கள் வகுதியின் கீழ் நிதி நிலை கூற்றில் உள்ளடக்கப்பட்டு ஆகுசெலவில் எடுத்துரைக்கப்படுகின்றன.

### 2.3.9 மோட்டார் வாகனங்கள்

கணக்குகளில் காணப்படும் மீள்விலை மதிப்பிடப்பட்டுள்ள / பதிவழிக்கப்பட்டுள்ள தொகைகள் மீது ஒரு நேர் நிரல் முறையியலின் அடிப்படையில் தேய்மானம் கணிப்பிடப்பட வேண்டிய மோட்டார் வாகனங்கள் சகல வகுதி மோட்டார் வாகனங்களினதும் 20% கழிவுப் பெறுமானத்தை தவிர்த்து தேய்மானம் கழிக்கப்படுதல் வேண்டும். சகல மோட்டார் வாகனங்களினதும் மதிப்பிடப்பட்டுள்ள பயனுள்ள வாகனங்களும் 2021.01.01 ஆம் திகதியிலிருந்து 10 ஆண்டுகள் எனக் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.4. நிதி சார் உபகரணங்கள்

### 2.4.1 நிதி சார் சொத்துக்களும் மற்றும் நிதி சார் பொறுப்புக்களும்

கம்பனி தனது சொத்துக்களை பின்வரும் வகுதிகளின் கீழ், இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் ஏனைய வருமதிகள், விற்பனையின் நிமித்தம் கிடைக்க செய்தல் மற்றும் முதிர்ச்சி முதலீடுகள் நிமித்தம் ஒதுக்கி வைத்தல் முதலிய அம்சங்கள் ஊடாக வகைப்படுத்துகின்றது. கம்பனி, தனது நிதி சார் பொறுப்புக்களை பின்வரும் வகுதிகளின் கீழ் நியாய விலை பெறுமானத்தில் இலாபம் அல்லது நட்டம் மற்றும் கடன்கள் மற்றும் பற்றுக்கள் முதலியவற்றில் வகைப்படுத்துகின்றது.

வகைப்படுத்தல் நிதி சார் சொத்துக்கள்/நிதி சார் பொறுப்புக்கள் எந்த நோக்கத்தின் நிமித்தம் கொள்வனவு செய்யப்பட்டனவே அந்த நோக்கத்தின் பேரில் தங்கியிருக்கும். முகாமைத்துவம் தனது நிதி சார் சொத்துக்களை/நிதி சார் பொறுப்புக்களை முதலில் இனங்கண்டு அதன் பின்னர் அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் இந்த சொத்துக்களின் விபரங்களை மீள்மதிப்பீடு செய்கின்றது.

### 2.4.2 ஆரம்ப இனங்காணலும் மற்றும் அளவீடும்

கம்பனி, சாதனங்களின் ஒப்பந்த சார் வழங்கல்களுக்கான தரப்பாக மாறுகின்ற போது ஒரு நிதி சார் சொத்தை அல்லது ஒரு நிதி சார் பொறுப்பை தனது நிதி நிலை கூற்றில் இனங்காணுகின்றது.

கம்பனி தனது நிதி சார் சொத்துக்களை முதலில் நியாய விலை பெறுமானத்தில் அளவிடுகின்றது. நிதி சார் சொத்து இலாபத்தின் அல்லது நட்டங்களின் ஊடாக நியாய விலை பெறுமானத்தில் கணிப்பிடப்படாத பட்சத்தில், அந்த ஒரு நிதி சார் சொத்துக்கு நேரடியாக சேர வேண்டிய கொடுக்கல்வாங்கல் ஆகுசெலவுகள் நிதி சார் சொத்துக்களின் ஆகுசெலவுக்கு சேர்க்கப்படுகின்றன.

கம்பனி தனது நிதி சார் பொறுப்புக்களை முதலில் நியாய விலை பெறுமானத்தில் அளவிடுகின்றது. ஒரு நிதி சார் பொறுப்பு இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய விலை பெறுமானத்தில் கணிப்பிடப் படாத பட்சத்தில் அந்த நிதி சார் பொறுப்புக்களின் விடயத்திற்கு நேரடியாக சேர வேண்டிய கொடுக்கல்வாங்கல் ஆகுசெலவுகள் கொணரப்படும் பெறுமானத்திலிருந்து கழிக்கப்படுகின்றன. வர்த்தக வருமதிகள் SLFRS 15 ஆம் இலக்க கணக்கீட்டு நியமத்தில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ளவாறு முதலில் கொடுக்கல்வாங்கல் விலையில் அளவிடப்படுகின்றன.

### 2.4.3 நிதி சார் சொத்துக்கள் வகைப்படுத்தல்

**(i)** நிதி சார் சொத்துக்கள், பின்வரும் விடயங்களின் அடிப்படையில் இலாபத்தின் அல்லது நட்டத்தின் ஊடாக அல்லது ஏனைய பிற முழுமையான வருமானம் ஊடாக நியாய விலை பெறுமானத்தில் வகைப்படுத்தப்பட்டு அதனையடுத்து கழிக்கப்படும் ஆகுசெலவில் அளவிடப்படுகின்றன.

a) நிதி சார் சொத்துக்களை முகாமை செய்வதற்கான கம்பனியின் வணிக மாதிரி மற்றும்;

b) நிதி சார் சொத்துக்களின் ஒப்பந்த ரீதியான காசுப் பாய்ச்சல் பண்புகள்

**(ii)** கழிக்கப்படும் ஆகுசெலவில் அளவிடப்படும் நிதி சார்ந்த சொத்துக்கள்

ஒரு நிதி சார் சொத்து, பின்வரும் இரண்டு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் கழிக்கப்படும் ஆகுசெலவில் அளவிடப்படும்:

a) ஒப்பந்த சார் காசுப் பாய்ச்சல்களை சேகரிக்கும் பொருட்டு நிதி சார் சொத்துக்களை ஒதுக்கி வைப்பதற்கு ஒரு வணிக மாதிரி நோக்கத்தினுள் நிதி சார் சொத்து ஒதுக்கப்படுதல், மற்றும்,

b) நிலுவையாக இருக்கின்ற ஆரம்ப தொகையின் மீது தனியான அடிப்படை மற்றும் வட்டி கொடுப்பனவுகளான காசுப் பாய்ச்சல் தொடர்பான குறித்த திகதிகளில் எழும் நிதி சார் சொத்துக்களின் ஒப்பந்த காலங்கள்.

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.4.3 நிதி சார் சொத்துக்கள் வகைப்படுத்தல் (தொடர்ச்சி)

**(iii)** ஏனைய முழுமையான வருமானத்தின் ஊடாக நியாய விலை பெறுமானத்தில் அளவிடப்படும் நிதி சார் சொத்துக்கள்

ஒரு நிதி சார் சொத்து, பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்டால் ஏனைய முழுமையான வருமானம் ஊடாக நியாய விலை பெறுமானத்தில் அளவிடப்படுகின்றது.

a) ஒப்பந்த ரீதியான காசுப் பாய்ச்சல்களை சேகரித்தல் மற்றும் நிதி சார் சொத்துக்களை விற்பனை செய்தல் ஆகியவற்றின் மூலம் அடையப்படுகின்ற ஒரு வணிக மாதிரி நோக்கத்தினுள் அந்த நிதி ஒதுக்கி வைக்கப்படுதல், மற்றும்,

b) நிலுவையாக இருக்கின்ற ஆரம்ப தொகையின் மீது தனியான அடிப்படை மற்றும் வட்டி கொடுப்பனவுகளான காசுப் பாய்ச்சல் தொடர்பான குறித்த திகதிகளில் எழும் நிதி சார் சொத்துக்களின் ஒப்பந்த காலங்கள்.

**(iv)** இலாபத்தின் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய விலை பெறுமானத்தில் அளவிடப்படும் நிதி சார் சொத்துக்கள்

ஒரு நிதி சார் சொத்து மேற்குறித்த (ii) மற்றும் (iii) ஆம் பந்திகளுக்கு இணங்க ஏனைய முழுமையான வருமானத்தின் ஊடாக நியாய விலை பெறுமானத்தில் அல்லது கழிக்கப்படுகின்ற ஆகுசெலவில் அளவிடப்பட்டாலொழிய இலாபத்தின் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய விலை பெறுமானத்தில் அளவிடப்படுகின்றது.

### 2.4.4 நிதி சார் பொறுப்புக்கள் வகைப்படுத்தல்

பின்வருவன தவிர, கழிக்கப்படுகின்ற ஆகுசெலவில் தொடர்ச்சியாக நிதி சார் பொறுப்புக்கள் அளவிடப்படும்.

a) இலாபத்தின் அல்லது நட்டத்தின் ஊடான நியாய விலை பெறுமான நிதி சார் பொறுப்புக்கள்.
b) சந்தை வட்டி வீத்திற்கு குறைந்த ஒரு வீதத்தில் ஒரு கடனை வழங்குவதற்கான பொறுப்புக்கள்.

### 2.4.5 மீள்வகைப்படுத்தல்

**(i)** நிதி சார் சொத்துக்கள், கம்பனி நிதி சார் சொத்துக்களை முகாமை செய்வதற்கான தனது வணிக மாதிரியை மாற்றும் போது மாத்திரம் மீள்வகைப்படுத்தப்படுகின்றன.

கம்பனி நிதி சார் சொத்துக்களை மீள்வகைப்படுத்தினால், அத்தகைய மீள்வகைப் படுத்தலானது மீள்வகைப்படுத்தல் திகதியில் இருந்து அனுகூலமான முறையில் பிரயோகிக்கப் பட்டு முன்னர் இனங்காணப்படும் இலாபங்களும் நட்டங்களும் (ஏற்பட்டுள்ள இலாபங்கள் / நட்டங்கள் அடங்கலாக) மீளெடுத்துரைக்கப்படுவதில்லை.

**(ii)** நிதி சார் பொறுப்புக்கள் மீளவகைப்படுத்தப்படுவதில்லை.

### 2.4.6 கழிக்கப்படும் ஆகுசெலவு மதிப்பீடு

நிதி சார் சொத்துக்களின் கொணரப்படும் மொத்த பெறுமானம் தொடர்பான பயனுள்ள வட்டி வீதத்தை பிரயோகித்து பயனுள்ள வட்டி முறையியலை பயன்படுத்துவதன் மூலம் வட்டி வருமானம் கணிக்கப் படுகின்றது.

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.4.7 நட்டம்

கம்பனி ஒரு நிதி சார் சொத்தின் மீது எதிர்பார்த்த கடன் சார்ந்த நட்டங்களுக்கான நட்டக் கொடுப்பனவுகளை இனங்காணுகின்றது. ஆரம்ப இனங்காணல் காரணமாக, அறிக்கையிடப்படும் திகதியில் நிதி சாதனம் மீதான கடன் ஆபத்துக்கள் கணிசமான அளவுகளில் அதிகரித்துள்ளது எனில், கடன் சார் நட்டங்களுக்கான எதிர்பார்த்த காலத்திற்கு சமனான ஒரு தொகையில் நட்டக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆரம்ப இனங்காணல் காரணமாக, அறிக்கையிடப்படும் திகதியில் நிதி சாதனம் மீதான கடன் ஆபத்துக்கள் கணிசமான அளவுகளில் அதிகரிக்கவில்லை எனில், நட்டக் கொடுப்பனவுகள், எதிர்பார்த்த 12 மாத கடன் நட்டங்களுக்கு சமனான ஒரு தொகையில், அந்த நிதி சார் சாதனங்களின் நிமித்தம் அளவிடப்படுகின்றன.

### 2.4.8 நிதி சார் சொத்துக்களை இனங்காணாது விடுதல்

கம்பனி, நிதி சார் சொத்துக்களை:

a) நிதி சார் சொத்துக்கள் காலாவதியாகுவதிலிருந்து வரும் காசுப் பாய்ச்சலுக்கான ஒப்பந்த உரிமைகள் இருக்கின்ற, அல்லது

b) நிதி சார் சொத்துக்களை மாற்றிக் கொடுத்து அதன் பின்னர் அந்த மாற்றல் இனங்காணாது விடுவதற்கு தகுதியாகுகின்ற போது இனங்காணாது விடுகின்றது.

### 2.4.9 நிதி சார் பொறுப்புக்களை இனங்காணாது விடுதல்

ஒரு நிதி சார் பொறுப்பு அதன் நிதி நிலை கூற்றிலிருந்து அகற்றப் படுகின்ற போது மாத்திரமே (அல்லது ஒரு நிதி சார் பொறுப்பின் பாகம்) அதாவது ஒப்பந்தத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கடப்பாடு நிறைவேற்றப்படும் அல்லது இரத்து செய்யப்படும் அல்லது முடிவுறும் போது அது இல்லாது போகுகின்றது.

### 2.5. வர்த்தக வருமதிகள்

வர்த்தக வருமதிகள் என்பது வழமையான வியாபார செயற்பாடுகளின் போது வழங்கப்படும் பொருட்களுக்கு அல்லது விநியோகிக்கப்படும் சேவைகளுக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகைகளாகும். அநேகமான விற்பனைகள் வழமையான கடன் நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. வர்த்தக வருமதிகளுக்கு வட்டி விதிக்கப்படுவதில்லை. கடன், வழமையான கடன் நிபந்தனைகளுக்கு அப்பால் நீடிக்கப்படுகின்ற போது, வர்த்தக வருமதிகள் பயனுள்ள வட்டி வீத முறையியலை பிரயோகித்து கழிக்கப் படும் ஆகுசெலவில் அளவிடப்படுகின்றன. மேலும் ஏனைய வருமதிகள் ஆகுசெலவில் அளவிடப்படும் நிதி சார் சொத்துக்கள் அல்ல.

அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதி இறுதியிலும், வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளின் கொணரப்படும் தொகைகள், அத்தகைய தொகைகள் அறவிடப்படுவதற்கு முடியாது என்பதற்கான ஏதாவது தெளிவான சான்று இருக்கின்றதா என்பதை தீர்மானித்துக் கொள்ளும் பொருட்டு மீளாய்வு செய்யப்படுகின்றன. எனவே, முழுமையான வருமான கூற்றில் நட்டம் உடனடியாக இனங்காணப்படுகின்றது.

கம்பனி, வர்த்தக வருமதிகளில் நட்டம் ஏற்பட்டுள்ளதா என்பதற்கான தெளிவான சான்று இருக்கின்றதா என அறிக்கையிடப்படும் திகதியில் அது தொடர்பாக மதிப்பிடுகின்றது. ஏற்படும் நட்டம் ஏற்கெனவேயுள்ள வருமதிகள் மற்றும் வரலாற்று சேகரிப்பு அனுபவம் ஆகியவற்றின் தற்போதைய மீளாய்வு நிலை அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. அத்தகைய ஏற்பாடுகள் உண்மையானதும் மற்றும் எதிர்பார்த்ததுமான நட்டத்தை பிரதிபலிக்கும் வகையில் வழமையான காலப் பகுதிகளில் சீராக்கப்படுகின்றன.

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.6. பொருட்பதிவேடுகள்

பொருட்கள், குறைந்த ஆகுசெலவிலும் மற்றும் தேறிய சாத்தியமான பெறுமானத்திலும் அளவிடப்படுகின்றன. பொருட்களின் ஆகுசெலவு கொள்வனவு ஆகுசெலவுகள், மாற்றல் ஆகுசெலவுகள் மற்றும் அவற்றின் தற்போதைய அமைவிடத்திற்கும் அவற்றின் தற்போதைய நிலைக்கும் கொண்டுவருவதில் ஏற்பட்டுள்ள ஏனைய ஆகுசெலவுகள் என்பவற்றை உள்ளடக்கியிருக்கும்.

தேறிய சாத்தியமான பெறுமானம், பொருட்களின் ஏற்கெனவேயுள்ள நிலையிலிருந்து விற்பனை செய்யக் கூடிய நிலைக்கு மாற்றும் ஆகுசெலவில் அல்லது குறைத்து மதிப்பிடப்படுகின்ற ஆகுசெலவில் வழமையான வர்த்தக நடவடிக்கைகளின் போது விற்பனை விலையில் மதிப்பிடப்படுகின்றது. பொருட்களை மதிப்பிடுவதற்கும் மற்றும் விநியோகிப்பதற்கும் கம்பனி முதல் நிலை ஆகுசெலவு சூத்திரத்தை (FIFO) பின்பற்றுகின்றது.

பொருட்களின் மீளறவீட்டு சாத்தியத்தை மதிப்பிடும் பொருட்டு, அறிக்கையிடப்படும் காலப் பகுதி இறுதியில், ஒரு நிபுணர் மூலம் பொருட்களின் நகர்வு மீளாய்வு செய்யப்படுகின்றது. அறவிடுவதற்கு முடியாது என இனங்காணப்படும் பொருட்கள் குறித்த ஆண்டு காலப் பகுதியில் பதிவழிக்கப்படுகின்றன.

**நிகழும் பணி**

நிகழும் பணி குறித்த ஆண்டு இறுதியில் நிறைவு செய்யப்படாதிருக்கும் பணி தொடர்பாக ஏற்பட்டுள்ள ஆகுசெலவுகளை பிரதிபலிக்கின்றது. அது கடந்த செலவுப் பட்டியல் திகதியிலிருந்து (அல்லது விலைமதிப்பீடு) குறித்த நிதி ஆண்டு முடிவடையும் வரை ஏற்பட்ட செலவு தொகையில் அளவிடப்படுகின்றது. குறித்த விஷேட கருத் திட்டங்களுடன் நேரடியாக தொடர்புபடுகின்ற சகல செலவுகளும் மற்றும் வழமையான இயக்க ஆற்றலின் அடிப்படையில் கம்பனியின் ஒப்பந்த சார் செயற்பாடுகளில் ஏற்பட்ட நிலையான மற்றும் வித்தியாசமான மேன்தலைகளின் ஒதுக்கம் என்பன ஆகுசெலவில் உள்ளடங்குகின்றன.

### 2.7. சொத்துக்களின் நட்டம்

நட்டத்திற்கான சாத்தியம் காணப்படுமாயின், பாதிக்கப்பட்ட ஏதாவது சொத்தின் அல்லது சம்பந்தப்பட்ட சொத்து பிரிவின் மீளறவிடக் கூடிய தொகை மதிப்பிடப்பட்டு அதன் கொணரப்படும் தொகையுடன் ஒத்தீடு செய்யப்படுகின்றது. அந்த மதிப்பிடப்பட்ட மீளறவிடக் கூடிய தொகை குறைவாக இருக்கின்ற பட்சத்தில், கொணரப்படும் தொகை அதன் மதிப்பிடப்பட்ட மீளறவிடக் கூடிய தொகைக்கு குறைக்கப்படுகின்றது. ஏற்பட்டுள்ள ஒரு நட்டம் முழுமையான வருமான கூற்றில் உடனயடியாக இனங்காணப்படுகின்றது.

அதனையடுத்து, ஏற்பட்டுள்ள ஒரு நட்டம் மீள்நிலைக்கு மாறுமாயின், குறித்த சொத்தின் அல்லது சம்பந்தப்படுகின்ற சொத்துக்கள் பிரிவின் கொணரப்படும் தொகை அதன் மீளறவிடக் கூடிய தொகையின் திருத்திய மதிப்பீட்டிற்கு அதிகரிக்கப்படுகின்றது. ஆயினும், முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட சொத்துக்களுக்காக அல்லது சம்பந்தப்பட்ட சொத்துக்கள் பிரிவுக்காக நட்டம் இனங்காணப்பட்டிருக்கவில்லை என நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தொகையின் மிகையில் அவ்வாறு அதிகரிக்கப் படுவதில்லை. ஏற்பட்டுள்ள ஒரு நட்டத்தின் மீள்நிலை முழுமையான வருமான கூற்றில் உடனடியாக இனங்காணப் படுகின்றது.

### 2.8. காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும்

காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் காசு நிலுவைகளை உள்ளடக்கி இருக்கும். கோரலின் அடிப்படையில் மீளசெலுத்த வேண்டிய மற்றும் கம்பனியினது காசு முகாமைத்துவத்தின் இன்றியமையாத பாகமாக விளங்கும் வங்கி மேலதிக பற்றுக்கள் காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்றின் நோக்கத்தின் நிமித்தம் காசும் மற்றும் காசு ஒப்புரவுகளினதும் பாகமாக உள்ளடக்கப்படுகின்றன.

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.8. காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் (தொடர்ச்சி)

காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்றின் நோக்கங்களுக்காக, காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் கையிலுள்ள காசையும், வங்கிகளில் மீளப்பெறக் கூடிய வகையில் இடப்படும் வைப்புக்கள், மூன்று மாதங்களுக்கு அல்லது அதற்கு குறைந்த கால உண்மையான முதிர்ச்சிகளுடன் கூடிய ஏனைய குறுங்கால அதிக திரவநிலை முதலீடுகள் மற்றும் தேறிய வங்கி பற்றுக்கள் என்பவற்றை உள்ளடக்கியிருக்கும். வங்கி மேலதிக பற்றுக்கள், நிதி நிலை கூற்றில், நடைமுறை பொறுப்புக்களின் கீழ் கடன்கள் விடயத்தில் உள்ளடக்கப்படுகின்றன.

### 2.9. எடுத்துரைத்த மூலதனம்

சாதாரண பங்குகள், ஒப்புரவின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன.

### 2.10. பொறுப்புக்கள், ஏற்பாடுகள் மற்றும் இடைநேர் பொறுப்புக்கள்

இந்த ஏற்பாடுகள், கம்பனி கடந்த கால நிகழ்வின் பயனாக ஒரு தற்போதைய கடப்பாட்டை (சட்ட அல்லது செயன்முறை) கொண்டுள்ள போது இனங்காணப்படுகின்றன. அநேகமாக பொருளாதார அனுகூல நன்மைகள் பதிந்திருக்கும் வளங்களின் வெளிப் பாய்ச்சல்கள் குறித்த கடப்பாட்டை தீர்ப்பதற்கு தேவைப்படுத்தும். நம்பத்தகுந்த மதிப்பீடு கடப்பாட்டின் அளவில் மேற்கொள்ளப்படலாம். ஏதாவது ஏற்பாட்டுடன் தொடர்புபடுகின்ற செலவு முழுமையான வருமான கூற்றின் கீழ் ஏதாவது தேறிய மீளளிப்பு விடயத்தில் குறிப்பிடப்படுகின்றது. ஏனைய பொறுப்புக்கள், தீர்ப்பனவு செய்யப்படும் போது மாற்ற வேண்டிய காசு பெறுமானத்தில் பதியப்படுகின்றன. வரலாற்று அனுபவத்தினதும் மற்றும் தனித் தனியான விடயங்களிலுள்ள குறித்த நியதிகளின் அடிப்படையில், இந்த ஏற்பாடுகள் கணிப்பிடப்படுகின்றன. கம்பனி அநேகமாக ஒரு பயன் மதிப்பீட்டு அடிப்படையில் ஒரு மதிப்பீட்டை எட்டுகின்றது. அறிந்த சகல வகை ஏற்பாடுகளும் நிதி கூற்றுக்களை தயாரிக்கும் பொருட்டு கணக்கில் கொள்ளப்பட்டுள்ளன.

இடைநேர் பொறுப்புக்கள் சாத்தியமான கடப்பாடுகளாகும். இந்த கடப்பாடுகள் இருக்கின்றனவா என்பது பொருளாதார நன்மைகளின் மாற்றம் சாத்தியமில்லாத அல்லது பொருளாதர நன்மை உடனடியாக அளவிடுவதற்கு முடியாதுள்ள சந்தர்ப்பத்தில், நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளினால் அல்லது தற்போதைய கடப்பாடுகளினால் மாத்திரம் உறுதிசெய்யப்படும். மேலும், இடைநேர் பொறுப்புக்கள் நிதி நிலை கூற்றில் இனங்காணப்படுகின்றன. ஆனாலும் அவை நிகழாத வரை வெளிப்படுத்தப்படமாட்டாது.

தற்பொழுது, இந்த கம்பனி வழமையான வணி செயற்பாடுகளிலிருந்து எழுகின்ற கோரல்களிலும் மற்றும் நிறைவு பெறாத வழக்ககளிலும் சம்பந்தப்படுகின்றது. கம்பனி தனது நிதி நிலை, இயக்கச்செயற்பாட்டு இலாபம் அல்லது காசுப் பாய்ச்சல்கள் என்பவற்றில் கொண்டுள்ள பொருண்மையான தாக்கத்திற்கு தனியாகவும் மற்றும் கூட்டாகவும் கோரல்களையும் மற்றும் வழக்குகளையும் எதிர்பார்ப்பதில்லை.

#### 2.10.1 பணியகத்திற்கு எதிரான

**தொழில் நியாய சபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள்**

**வழக்கு இலக்கம் - 27 /Anu /2584/2020**
**ஏ.ஏ.சி.எஸ். விஜேவர்த்தன எதிர் வ/ப மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) நிறுவனம்**

ஊழியரின் சேவை முடிவுறுத்தப்பட்டதால் தொழில் பிணக்கு எழுந்துள்ளது. ஊழியர் தன்னை நிலுவை சம்பளமும் நஷ்டஈடும் அடங்கலாக தொழிலில் மீளமர்த்துமாறு கோருகின்றார். வழக்கு விளம்பப்பட்டு வருகின்றது.

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.10.1 பணியகத்திற்கு எதிரான (தொடர்ச்சி)

**வழக்கு இலக்கம் - 23/Ku/26/2020**
**கே.எம்.சி.பி. கருணாரத்ன எதிர் வ/ப மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) நிறுவனம்**

ஊழியரின் சேவை முடிவுறுத்தப்பட்டதால் தொழில் பிணக்கு எழுந்துள்ளது. ஊழியர் தன்னை நிலுவை சம்பளமும் நஷ்டஈடும் அடங்கலாக தொழிலில் மீளமர்த்துமாறு கோருகின்றார். வழக்கு விளம்பப்பட்டு வருகின்றது.

**வழக்கு இலக்கம் - LT/03/92/2021**
**ஆர்.எம்.ஆர். சதமாலி எதிர் வ/ப மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) நிறுவனம்**

ஊழியரின் சேவை முடிவுறுத்தப்பட்டதால் தொழில் பிணக்கு எழுந்துள்ளது. ஊழியர் தன்னை நிலுவை சம்பளமும் நஷ்டஈடும் அடங்கலாக தொழிலில் மீளமர்த்துமாறு கோருகின்றார். வழக்கு விளம்பப்பட்டு வருகின்றது.

### 2.11. ஊழியர் ஓய்வூதிய நன்மைகள்

**திட்டவட்டமான ஓய்வூதிய பங்களிப்பு திட்டங்கள்**

திட்டவட்டமான ஒரு ஓய்வூதிய பங்களிப்பு திட்டம் என்பது தொழிலுக்கு பிற்பட்டகால ஒரு ஓய்வூதிய நன்மைகள் திட்டமாகும். இந்த ஓய்வூதிய திட்டத்திற்கான பங்களிப்பு தொகைகள் தனியான ஒரு நிதியத்திற்கு செலுத்தப்படுகின்றன. மேலும் தொகைகளை செலுத்துவதற்கான சட்டமுறையான கடப்பாடு அல்லது ஒப்பந்த கடப்பாடு ஏதும் இந்த நிறுவனத்திற்கு கிடையாது. திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் பங்களிப்பு திட்டத்திற்கான கடப்பாடுகள் ஊழியர்களினால் சேவைகள் வழங்கப்படும் காலப் பகுதிகளில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஒரு ஊழியர் நன்மைகள் ஆகுசெலவாக இனங்காணப்படுகின்றன. முன்-கூட்டிய பங்களிப்புகள் எதிர்காலத்தில் கிடைக்கக் கூடியதாகவுள்ள கொடுப்பனவுகள் அல்லது ஒரு காசு மீளளிப்பு அளவுக்கு ஒரு சொத்தாக இனங்காணப்படுகின்றன.

**திட்டவட்டமான ஓய்வூதிய பங்களிப்பு திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி**

சகல ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்வதற்கு தகுதியுடைய ஊழியர்களாவர். சகல ஊழியர்களும் அந்தந்த நியதிச்சட்டங்களுக்கும் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க அந்தந்த உரிய பங்களிப்பு நிதியங்களில் உள்ளடக்கப்படுகின்றனர். கம்பனி ஒவ்வொரு ஊழியரதும் சம்பளத்தில் 12% வீதத்தையும் மற்றும் 3% வீதத்தையும் முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்கின்றது.

**திட்டவட்டமான நன்மைகள் கடப்பாடு**

திட்டவட்டமான ஒரு நன்மைகள் திட்டம் என்பது திட்டவட்டான ஒரு பங்களிப்பு திட்டம் அல்லாத திட்டமாகும். திட்டவட்டமான நன்மைகள் திட்டம், வழமையாக வயது, சேவை செய்த ஆண்டுகள் மற்றும் நஷ்டஈடு போன்ற ஒன்று அல்லது அதற்கு அதிகமான காரணிகளை பொறுத்து, ஒரு ஊழியர் பெறுகின்ற ஒரு தொகையான நன்மையை விபரிக்கின்றது.

அறிக்கையிடப்படும் திகதியிலுள்ள திட்டவட்டமான நன்மைகள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமானம் திட்டவட்டமான நன்மைகள் திட்டத்திற்கு நிதி நிலை கூற்றில் இனங்காணப்படும் பொறுப்பாகும். திட்டவட்டமான நன்மைகள் கடப்பாடு ‘ஊழியர்கள் நன்மைகள்’ என LKAS 19 ஆம் இலக்க கணக்கீட்டு நியமத்தின் மூலம் சிபாரிசு செய்யப் பட்டுள்ளவாறான எதிர்பார்த்த அலகு கடன் முறையியலை (PUC) பிரயோகித்து சுயாதீன மதிப்பீட்டாளரினால் வருடாந்தம் கணிப்பிடப் படுகின்றது. திட்டவட்டமான நன்மைகள் திட்டத்திற்கான மதிப்பீட்டு இலாபங்களும் அவை எழும் காலப் பகுதியில் ஏனைய முழுமையான வருமானத்தில் முழுமையாக இனங்காணப் படுகின்றன. இந்த பொறுப்புக்கு வெளிவாரியாக ஏதும் நிதியளிக்கப் படுவதில்லை.

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.11. ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் (தொடர்ச்சி)

**திட்டவட்டமான நன்மைகள் கடப்பாடு (தொடர்ச்சி)**

எனினும், 1983 இன் 12 ஆம் இலக்க ஓய்வூதிய பணிக் கொடைகள் சட்டத்திற்கு இணங்க, ஒரு ஊழியருக்கான ஓய்வூதிய பணிக் கொடை தொடர்பான பொறுப்பு ஐந்து வருட கால தொடர்ச்சியான சேவை கால நிறைவின் பின்னரே எழுகின்றது.

### 2.12. நடைமுறை வரியும் மற்றும் பிற்போடப்பட்ட வரியும்

நடைமுறை வரியும் மற்றும் பிற்போடப்பட்ட வரியும் வருமான வரி செலவில் அடங்குகின்றன. அது இலாப நட்ட கணக்கில் இனங்காணப் படுகின்றது.

### 2.12. நடைமுறை வரியும் மற்றும் பிற்போடப்பட்ட வரியும்

#### 2.12.1 நடைமுறை வரி

நடைமுறை வரி, குறித்த ஆண்டிற்கான வரிவிதிக்கத்தகு வருமானத்தின் அல்லது நட்டத்தின் பேரில் செலுத்த அல்லது கிடைக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படும் வரியையும் மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக செலுத்த அல்லது கிடைக்க வேண்டிய வரிக்கான ஏதாவது திருத்தத்தையும் உள்ளடக்கியிருக்கும். கிடைக்க அல்லது செலுத்த வேண்டிய நடைமுறை வரி தொகையே வருமான வரி ஏதுமிருப்பின் அதனுடன் தொடர்புடைய நிச்சயமற்ற தன்மையை பிரதிபலிக்கும் செலுத்தப்படுதல் அல்லது கிடைக்கப் பெறுதல் என எதிர்பார்க்கப்படும் வரி தொகையின் சிறந்த மதிப்பீடாகும்.

அது சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதங்களை அல்லது அதனையடுத்து அறிக்கையிடப்படும் திகதியில் சட்டாக்கப்படும் வரி வீதங்களை பிரயோகித்து அளவிடப்படுகின்றது. பங்குலாபங்களில் இருந்து எழுகின்ற ஏதேனும் வரியும் நடைமுறை வரியில் உள்ளடங்கும்.

வருமான வரிக்கான ஏற்பாடு, நிதி கூற்றுக்களில் அறிக்கையிடப் பட்டுள்ளவாறு வருமான கூறுகளினதும் மற்றும் செலவின கூறுகளினதும் அடிப்படையில் அமைந்திருக்கும். இது 2017 இன் 24 ஆம் இலக்க புதிய உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் அந்த சட்டத்திற்கான ஏதாவது திருத்தங்களுக்கும் இணங்க கணிப்பிடப்படுகின்றது. கம்பனிக்கு ஏற்புடைய வருமான வரி வீதம் 14% வீதமாகும். ஒரு சில தகவு திறன்கள் பூர்த்தி செய்யப்படுமாயின் மாத்திரம் நடைமுறை வரி சார் சொத்துக்களும் பொறுப்புக்களும் சமப்படுத்தப்படுகின்றன.

ஒப்புரவில் நேரடியாக இனங்காணப்படும் விடயங்கள் தொடர்பான நடைமுறை வரி ஒப்புரவில் இனங்காணப்படுகின்றது. இந்த வரி இலாப அல்லது நட்ட கணக்கில் இனங்காணப்படுவதில்லை. ஏற்புடைய வரி ஒழுங்கு விதிகள் பொருள்கோடலுக்கு அமைவாக இருக்கின்ற மற்றும் பொருத்தமானவாறு ஏற்பாடுகளை உறுதிசெய்கின்ற சந்தர்ப்பங்கள் தொடர்பான வரி புறழ்வுகளில் எடுத்துக் கொள்ளப்படும் நிலைகளை முகாமைத்துவம் வழமையான காலப் பகுதியில் மதிப்பிடுகின்றது.

#### 2.12.2 பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வரி, நிதி சார் அறிக்கையிடும் நோக்கங்களின் நிமித்தம் சொத்துக்களினதும் மற்றும் பொறுப்புக்களினதும் கொணரப்படும் தொகைகளுக்கும் மற்றும் வரி விதித்தல் நோக்கங்களின் நிமித்தம் பயன்படும் தொகைகளுக்கு இடையில் காணப்படும் தற்காலிக வித்தியாசங்கள் தொடர்பாக இனங்காணப்படுகின்றது.

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.12.2 பிற்போடப்பட்ட வரி (தொடர்ச்சி)

அநேகமாக எவற்றை பயன்படுத்த முடியுமோ அவற்றுக்கு எதிராக கிடைக்கக் கூடிய எதிர்காலத்தில் வரிவிதிக்கத்தகு இலாபங்களின் அளவுக்கு கழிக்கக் கூடிய தற்காலிக வித்தியாசங்கள் மற்றும் பயன்படாத வரி சார் நட்டங்கள், பயன்படாத வரி சார் கடன்கள் என்பவற்றின் நிமித்தம் பிற்போடப்பட்ட வரி சார் சொத்துக்கள் இனங்காணப்படுகின்றன. பிற்போடப்பட்ட வரி சார் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு அநேகமாக சம்பந்தப்படும் வரி சார் நன்மைகள் ஒருபோதும் உணரப்படாது என்ற அளவுக்கு குறைக்கப்படுகின்றன. அத்தகைய குறைப்புகள் எதிர்காலத்தில் வரிவிதிக்கத்தகு நன்மைகளின் நிகழ்தகவு அதிகரிக்கும் போது மீளொதுக்கப் படுகின்றன.

இனங்காணப்படாத பிற்போடப்பட்ட வரி சார் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளமதிப்பிடப் பட்டு அநேகமாக எவற்றை பயன்படுத்த முடியுமோ அவற்றுக்கு எதிராக கிடைக்கக் கூடிய எதிர்கால வரிவிதிக்கத்தகு நன்மைகள் மாறியுள்ளன என்ற அளவுக்கு இனங்காணப் படுகின்றன.

பிற்போடப்பட்ட வரி, ஏற்கெனவே சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது அதனையடுத்து அறிக்கையிடப்படும் திகதியில் சட்டமாக்கப்படும் வரி வீதங்களை பிரயோகித்து, தற்காலிக வித்தியாசங்கள் மீள்நிலைக்கு வருகின்ற போது பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படும் வரி வீதங்களில் அளவிடப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரி அளவீடு, கம்பனி சொத்துக்களினதும் மற்றும் பொறுப்புக்களினதும் கொணரப்படும் தொகையை மீளறவிடுவதற்கு அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு, அறிக்கையிடப்படும் திகதியில் கம்பனி எதிர்பார்க்கும் முறையிலிருந்து வரக்கூடிய வரி சார் விளைவுகளை பிரதிபலிக்கும்.

இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு வெளியால் இனங்காணப்படும் விடயங்கள் தொடர்பான பிற்போடப்பட்ட வரி இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு அப்பால் இனங்காணப்படுகின்றது. பிற்போடப்பட்ட வரி விடயங்கள் ஏனைய விரிவான வருமானத்தில் அல்லத நேரடி ஒப்புரவில் குறிப்பான கொடுக்கல்வாங்களுடன் இணைந்த விடயங்களில் இனங்காணப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரி சார்ந்த சொத்துக்களும் மற்றும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்களும் நடைமுறை வருமானப் பொறுப்புக்களும் மற்றும் அதே வரி விதிக்கத்தகு நிறுவத்துடனும் மற்றும் அதே வரி விதிப்பு அதிகார சபையுடனும் தொடர்புடைய பிற்போடப்பட்ட வரிகளுக்கும் எதிராக நடைமுறை வரிச் சொத்துக்களை சமப்படுத்துவதற்கு சட்டரீதியில் நடைமுறைப்படுத்தக்கூடிய உரிமை காணப்பட்டால் சமப்படுத்தப்படும்.

**பிற்போடப்பட்ட வரிகள் தொடர்பான முக்கிய தீர்மானங்கள்**

பயன்படுத்தக் கூடிய நட்டங்களுக்கு எதிராக கிடைக்கக் கூடிய அநேகமாக வரிவிதிக்கத்தகு இலாபத்தின் அளவுக்கு பயன்படாத வரி நட்டங்களின் நிமித்தம், பிற்போடப்பட்ட வரி சார் சொத்துக்கள் இனங்காணப்படுகின்றன. எதிர்கால வரி திட்டமிடுகை திறமுறைத் திட்டங்கள் அடங்கலாக, எதிர்கால வரிவிதிக்கத்தகு அளவினதும் மற்றும் அநேகமாக காலத்தினதும் அடிப்படையில் இனங்காணக் கூடிய பிற்போடப்பட்ட வரி சார் சொத்துக்களின் அளவை நிர்ணயிக்கும் பொருட்டு, முக்கிய முகாமைத்துவ தீர்மானம் தேவைப்படுகின்றது.

### 2.13. குத்தகைகள்

**நிதி சார் குத்தகைகள்**

ஒரு குத்தகை அது உரித்துடைமைக்கு இடைநேர் கணிசமான சகல ஆபத்துக்களையும் மற்றும் வழங்கல்களையும் பரிமாற்றுமாயின், ஒரு நிதி சார் குத்தகையாக வகைப்படுத்தப்படுகின்றது.

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.13. குத்தகைகள் (தொடர்ச்சி)

**ஆரம்ப இனங்காணலும் மற்றும் அதனையடுத்து வரும் அளவீடும்**

முதலில், சொத்துக்கள் நிதி சார் குத்தகையினதும் மற்றும் நிதி சார் குத்தகை பொறுப்புக்களினதும் கீழ் ஒதுக்கி வைக்கப்படுகின்றன. பின்னர் அந்த சொத்துக்கள் குத்தகையின் ஆரம்பத்தில் நிர்ணயிக்கப் படும் ஆகக் கூடிய குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமானத்திலும் மற்றும் குத்தகை சொத்துக்களின் குறைந்த நியாய விலை பெறுமானத்திலும் இனங்காணப்படுகின்றன.

அதனையடுத்து வரும் குத்தகை கொடுப்பனவுகள் பயனுள்ள வட்டி முறையை பிரயோகித்து, நிதி சார் கட்டணத்திற்கும் மற்றும் நிலுவை பொறுப்பின் குறைவுக்கும் இடையில் பாகமாக ஒதுக்கப்படுகின்றன.

**செயல்படு குத்தகைகள்**

செயல்படு குத்தகைகளின் கீழ் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் குத்தகை காலத்திற்கு, ஒரு நேர் நிரல் அடிப்படையில், இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

### 2.14. வருமான இனங்காணல்

வருமானம் என்பது ஒரு நிறுவனத்தின் வழமையான செயற்பாடுகளில் இருந்து வருகின்ற ஒரு அம்சமாகும். SLFRS 15 ஆம் இலக்க கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க, வருமானம் வாடிக்கையாளர் ஒருவர் பொருட்களை அல்லது சேவைகளை தனது கட்டுப்பாட்டில் பெறுகின்ற போது, உரித்தாக வேண்டும் என கம்பனி எதிர்பார்க்கும் தொகையில் (கம்பனி ஒரு செயலாற்றுகை கடப்பாட்டில் திருப்தி கொள்கின்ற போது) இனங்காணப்படுகின்றது. சீராக்கல்களை தேவைப்படுத்தும் காலப் பகுதியில் அல்லது ஒரு காலப் புள்ளியில் வாடிக்கையாளர் அந்த சொத்தக்களை தனது கட்டுப்பாட்டில் பெறுகின்ற போது, பொருட்கள் அல்லது சேவைகள் மாற்றப்படுகின்றன. SLFRS 15 ஆம் இலக்க கணக்கீட்டு நியமம் வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்து வருமானத்தை இனங்காணும் பொருட்டு ஒரு ஐந்து கட்ட மாதிரியை அறிமுகப்படுத்துகின்றது.

பின்வரும் தகவு திறன்கள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும் போது கம்பனி ஒரு வாடிக்கையாளருடனான ஒரு ஒப்பந்தத்திற்கு கணக்கீடு செய்கின்றது.

a) ஒப்பந்தத்திற்கான தரப்புகள் ஒப்பந்தத்தை (எழுத்தில், வாய்மொழி மூலமாக அல்லது ஏனைய வழக்கமான வணிக செயன்-முறைகளுக்கு இணங்க) அங்கீகரித்துள்ளன. இந்த தரப்புகள் தமது அந்தந்த கடப்பாடுகளை நிறைவேற்றும் பொறுப்பை கொண்டிருப்பார்கள்.

b) மாற்ற வேண்டிய பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பாக கம்பனி ஒவ்வொரு தரப்புக்கும் இருக்கின்ற உரிமைகளை இனங்காணலாம்.

c) மாற்ற வேண்டிய பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பான கொடுப்பனவு நியதிகளை கம்பனி இனங்காணலாம்.

d) ஒப்பந்தம் வர்த்தக முக்கியத்துவத்தை (அதாவது:- ஒப்பந்தத்தின் பயனாக மாற்ற எதிர்பார்க்கப்படுகின்ற கம்பனியின் எதிர்கால காசுப் பாய்ச்சல் தொகை அல்லது ஆபத்து, காலம்); மற்றும்

e) வாடிக்கையாளர்களுக்கு மாற்றப்படும் பொருட்களுக்கான அல்லது சேவைகளுக்கான பரிமாற்றத்தில் கம்பனிக்கு உரித்தாகும் தொகையை அநேகமாக கம்பனி சேகரிக்கின்றது.

**நிர்மாண ஒப்பந்தங்கள்**

**நிர்மாண வருமானம்**

நிர்மாண வருமானம், SLFRS 15 ஆம் இலக்க கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க, வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வரும் வருமானத்தில், ஒப்பந்த நிறைவு கட்டத்திற்கான (உள்ளீட்டு முறையியலின் அடிப்படையில்) அளவில், இலாப அல்லது நட்ட கூற்றில் இனங்காணப்படுகின்றது.

# நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள் (தொடர்ச்சி)

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.14. வருமான இனங்காணல் (தொடர்ச்சி)

**நிர்மாண வருமானம் (தொடர்ச்சி)**

உள்ளீட்டு முறையியலின் அடிப்படையில், வருமானம், செயலாற்றுகை கடப்பாட்டின் திருப்திற்கு என எதிர்பார்க்கப்படும் மொத்த உள்ளீடுகளுக்கான (மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு) உரிய செயலாற்றுகை கடப்பாட்டிற்கான கம்பனியின் உள்ளீட்டு அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

STC இன் அங்கீகாரம் கிடைக்கவுள்ள கருத் திட்டங்கள் தொடர்பான ஒப்பந்த வருமானம் குறித்த ஒப்பந்தத்தில் உடன்பட்டுள்ள ஆரம்ப வருமான தொகையின் 90% வீத அளவுக்கும் மற்றும் கம்பனிக்கு உரித்தாக வேண்டும் என கம்பனி எதிர்பார்க்கும் அளவுக்கு ஒப்பந்த பணி, கோரல்கள் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் என்பவற்றில் ஏதாவது வித்தியாசங்களுக்கும் மாத்திரம் இனங்காணப்படுகின்றது.

STC அங்கீகரிக்கும் ஒப்பந்த வருமான அங்கீகாரத்தின் நிமித்தம், அந்த அங்கீகாரம் STC இடமிருந்து கிடைத்தவுடன் (உரித்தாகும் உண்மையான தொகை) ஒப்பந்த வருமானம் திருத்தப்படுகின்றது. ஏனைய ஒப்பந்தங்களுக்கான ஒப்பந்த விலை குறித்த ஒப்பந்தத்தில் உடன்பட்டுள்ள ஆரம்ப தொகையையும் மற்றும் ஒப்பந்த பணியிலுள்ள ஏதாவது வித்தியாசங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

### 2.15. தேறிய நிதி சார் வருமானம்/ (செலவு)

#### 2.15.1 நிதி சார் வருமானம்

நிதி சார் வருமானம் முதலீடு செய்யப்படும் நிதி மீதான வட்டி வருமானத்தை உள்ளடக்கியிருக்கும். வட்டி வருமானம் பயனுள்ள வட்டி வருமான வீதத்தை (EIR) பிரயோகித்து பதியப்படுகின்றது. நிதி சார் சொத்துக்களின் அல்லது நிதி சார் பொறுப்புக்களின் கொணரப்படும் தேறிய தொகைக்கு பொருத்தமான வகையில், எதிர்பார்க்கப்படும் நிதி சார் சொத்துக்களின் பாவனை காலத்தின் அல்லது குறித்த ஒரு காலப் பகுதியின் ஊடாக மதிப்பிடப்படும் எதிர்கால கிடைப்பனவுகளை சரியாக தள்ளுபடி செய்கின்ற வீதமே இந்த வீதமாகும். வட்டி வருமானம் இலாப அல்லது நட்ட கூற்றில், தேறிய நிதி சார் வருமான விடயத்தின் கீழ் உள்ளடக்கப்படுகின்றது.

#### 2.15.2 நிதி சார் ஆகுசெலவு

நிதி சார் ஆகுசெலவு, கடன்கள் மீதான வட்டி சார் செலவை உள்ளடக்கியிருக்கும். வட்டி சார் செலவு பயனுள்ள வட்டி வருமான வீதத்தை (EIR) பிரயோகித்து பதியப்படுகின்றது. நிதி சார் சொத்துக்களின் அல்லது நிதி சார் பொறுப்புக்களின் கொணரப்படும் தேறிய தொகைக்கு பொருத்தமான வகையில், எதிர்பார்க்கப்படும் நிதி சார் சொத்துக்களின் பாவனை காலத்தின் அல்லது குறித்த ஒரு காலப் பகுதியின் ஊடாக மதிப்பிடப்படும் எதிர்கால காசு கொடுப்பனவுகளை சரியாக தள்ளுபடி செய்கின்ற வீதமே இந்த வீதமாகும்.

நிர்மாண அல்லது அபிவிருத்தி காலப் பகுதியில் சொத்துக்களின் ஆகுசெலவின் பாகமாக மூலதனமாக்கப்படும் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் நிர்மாணத்திற்கு அல்லது அபிவிருத்திற்கு நேரடியாக சேரக்கூடியவை தவிர, கடன் ஆகுசெலவுகள், அவை ஏற்படும் காலப் பகுதியில் செலவாக இனங்காணப் படுகின்றன.

### 2.16. செலவின இனங்காணல்

செலவுகள், குறித்த வருமான விடயங்களின் சம்பாத்தியங்களுக்கும் மற்றும் ஏற்படும் ஆகுசெலவுகளுக்கும் இடையில் காணப்படும் ஒரு தொடர்பின் அடிப்படையில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப் படுகின்றன.

# நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள் (தொடர்ச்சி)

## 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.16. செலவின இனங்காணல் (தொடர்ச்சி)

வணிக செயற்பாடுகளை மேற்கொள்கின்ற போது ஏற்படும் சகல செலவுகளும் குறித்த ஆண்டிற்கான இலாபத்தில் கிடைக்கும் வருமானத்திற்கு எதிராக கணக்கு காட்டப்பட்டுள்ளன. பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தல் ஆகிய செயற்பாடுகள் செலவினம் ஏற்படும் குறித்த ஆண்டில், இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. செலவுகள் அட்டுறு அடிப்படையில் இனங்காணப் படுகின்றன.

**நிர்மாண ஒப்பந்தங்கள்**

குறித்த ஆண்டு காலப் பகுதியில், ஒவ்வொரு ஒப்பந்தம் தொடர்பாகவும் சேரக்கூடிய ஏற்படும் மொத்த ஆகுசெலவு நிர்மாண ஆகுசெலவுகளில் உள்ளக்கப்பட்டுள்ளது.

**ஏனைய செலவுகள்**

ஒரு வினைத் திறன் வாய்ந்த விதத்தில், வணிக செயற்பாடுகளை மேற்கொள்வதிலும் மற்றும் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை பராமரிப்பதிலும் ஏற்படும் சகல செலவுகளும் முழுமையான வருமான கூற்றுக்கு எதிராக கணக்கு காட்டப் பட்டுள்ளன.

**பங்குலாப பகிர்ந்தளிப்பு**

கம்பனியின் அக்கறையுடைய தரப்புகளுக்கான பங்குலாப பகிர்ந்தளிப்பு கம்பனியின் அந்த அக்கறையுடைய தரப்புகளினால் அந்த பங்குலாபங்கள் அங்கீகரிக்கப்படும் காலப் பகுதியில், கம்பனியினது நிதி கூற்றுக்களில் பொறுப்பு என இனங்காணப் படுகின்றன.

### 2.17. அறிக்கையிடப்படும் திகதிற்கு பின்னர் எழும் சம்பவங்கள்

